
விலை 15/=

இதழ் 20 21

1995

ISSN 391-0698

# விடிவு



ஒரு மக்கள் கலை [illegible] பேரவை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸீஸ் மன்றம்

மலையகத்தின் தேசிய எழுச்சிக்குத் தடையாகவுள்ள
துரோகமிக்க தொழிற்சங்கத் தலைமைகளினை
விடிவு அம்பலப்படுத்தி வருகிறது.
விடிவின் வரலாற்றுப் பயணத்துக்கு எமது
ஆதரவுகளை முதன்மைப்படுத்துகின்றோம்.

அஸ்ரப் அஸீஸ்,
அஸீஸ் அமைப்புகளின் தலைவர்,
இல: 17, புதிய சோனகத்தெரு,
கொழும்பு - 12, இலங்கை.
தொலைபேசி:330597


## உள்ளே


அரசின் தீர்வு யோசனைகள்
ஒரு அரசியல் அணுகுமுறை 04

தென்கிழக்கு மாகாணமும்,
முஸ்லீம் தேசத்தில் அதன் பாதிப்பும் 08

பலிபீடத்தில் மலையக மக்கள் 12

ஜே.வி.பி. ஒரு மீளாய்வு-4
புரட்சி தோல்வி பெறுமா? 17

சோஷலிசம்
இதற்கு முன்பும், இதற்குப் பின்பும் 20

நானும் என் எழுத்தும்
தஸ்லிமா நஸ்ரின் 24

நொறுங்களின் விசாலம் 25

இலங்கைத்தீவும் இலக்கில்லாத்
தீர்வுகளும் 26

கணவன்மார்களின் கண்ணியமற்ற
கலவியலுக்கு சிறைத்தண்டனை 33

மனித இருப்பு ஒரு சமூக நோக்கு 35

மலையகத்தில் காடு வளர்ப்புக்குத்
திட்டம்
இரண்டரை இலட்சம்
தோட்டத் தொழிலாளர் வீதியில் 36



பிரதம ஆசிரியர்:
ஆர்.எம்.இம்தியாஸ்

ஆசிரியர் குழு:
எம்.பாலகிருஷ்ணன்.
பெ.பிரபாகரன்.
அ.அஸ்கர்
பி.எம் பாஜிக்

368/1 நாகாவெல வீதி, புதிய நகர்,
கொட்டிகாவத்தை


# விடிவு

## யுத்தம் எதிரான வன்செயல்!

யுத்தம் மனுக்குலத்தின் மாபெரும் எதிரி.

எந்த அடிப்படையில் யுத்தம் ஏற்பட்டாலும் அதன் அனர்த்தங்கள் அழகற்றவை. கொடுமையானவை. மக்களை எல்லாம் அந்நியமாக்குபவையாகும். ஆதலால் யுத்தத்துக்கு எதிரான நிலைப்பாடுகள் நிகழும் உலகநாடுகளில் அதிக முக்கியமான கவனத்தை கவரக்கூடியது ஆகும்.

ஆளும் வர்க்கங்கள் அரசியல் அபிலாஷை களை முன்னெடுக்கும் அடிப்படைத் தேவை களுக்காக யுத்தத்தை ஆர்வமாக்கின்றன. தமது இருப்பை பாதுகாப்பதற்கான ஒரு வசதியான வாய்ப்பாகவே யுத்தத்தை கணித்து வருகிறது. மேலும் சமூக சுரண்டல் மிக தொடர்ச்சியாகத் தொடருவதற்கான ஒரு அழகான அரசியல் வாய்ப்பாடு யுத்த மாகும். இதன் பின்னணியிலேயே இலங்கை யிலும் யுத்தங்களின் வரலாறும் வியூகமாகிறது.

இலங்கையில் நிகழும் யுத்தமானது தேசிய இனங்கள் மத்தியில் மாபெரும் பகைமை களை தோற்றுவித்துள்ளன. இனங்கள் மத்தியில் அவநம்பிக்கை, குரோதம் ஆகியன மிக பெரிதாகி நடைபெற்று வந்துள்ளன. அதன் ஆழமான தாக்கங்கள் இன ஒற்றுமை யினை வெகுதூரத்தில் தொலைத்துள்ளன. இதன் அடிப்படை வெற்றிகளை இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் முதலாளித்துவ வர்க்கம் சுகமாக அனுபவிக்கின்றன. இலங்கையில் யுத்தத்துக்கு எதிரான இயக்கங்கள் தோன்றியுள்ளன. ஆயின் இலங்கையில் யுத்தமானது சிங்களப் பெரும் தேசியவாதத்துக்கும், தமிழ் தேசியவாதத்திற்கும் இடையில் நிகழும் போக்கினையே பிரதிபலிக்கின்றது.

சிங்களப் பெரும் தேசியவாதத்தை எதிர்த்து இருப்பைப் பேணுவதற்காக தற்காப்பு யுத்தமொன்றை நடாத்துவதற்கு தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் கட்டாயப்படுத்தப்பட்டன என்பது பழைய சங்கதி. இத்தகைய தற்காப்பு யுத்தம் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய எல்லைக்குள் அடங்குவதனால் சிங்களப் பேரின வாதத்துக்கு எதிரான நகர்வுகள் முழுமையாக நியாயப்படுத்தப்பட்டன. ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ்த் தேசிய யுத்தத்தினை ஆதரிப்பது வரலாற்றுக் கடமையாகும். யுத்தம் எவ்வளவுதான் மோசமானதாயினும் ஒரு இனம் தனது சுயநிர்ணயத்துக்காக, வாழ்வியலுக்காக, தற்காப்புக்காக யுத்தம் ஒன்றை முன்னெடுப்பது தவிர்க்கமுடியாததாகும். அவ்வகையில் இலங்கையில் தமிழ்த் தேசிய இனத்தினது சுயநிர்ணய போராட்டம் நியாயப்படுத்தலுக்கு உள்ளாக வேண்டியது என்றே நாம் கறாராக அபிப்பிராயப்படுகிறோம்.

தமிழ்த் தேசியவாதப் போராட்டத்தை முழுமையாகத் தடுக்கும் அரசியல் ஆளுமை தமிழ் மக்களது சுயநிர்ணயத்தை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வுத்திட்டத்திலேயே தங்கியுள்ளது. ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் யுத்தத்தினை இன்னொரு எதிர் யுத்தத்தால் கட்டுப்படுத்தலாம் என்பது அழகான கனவுதான். ஒடுக்கும் அரச யுத்தத்திற்கு சமாதான யுத்தம் என்ற வியாக்கியானம் கூறினாலும் சமாதானம் என்பது இன சமத்துவத்தில் ஏற்படும் என்பதனையே அரசியல் வரலாறுகள் அம்பலப்படுத்துகின்றன. தமிழ் மக்களது அபிலாஷைகளை மிக நேர்மையாகத் தீர்த்து வைக்க விரும்பும் அரசியல் ஆலோசனைகளின் பொதியொன்றின் மூலம் மட்டுமே தமிழ்த்தரப்பு யுத்த நியாயத்தை அந்நியமாக்கலாம். ஆயினும் இதனை இன்றைய அரசாங்கம் வெற்றிகரமாக சாதிக்கும் என்பதற்கான எந்தவொரு ஆதாரமும் அடித்தளமாக இல்லை. தமிழ்த்தேசியவாதத்தின் இன்றைய தலைமையின் அரசியல் குணாம்சங்கள் அல்லது அவர்களது அரசியல் அபிலாஷைகள் குறித்து, அல்லது அவர்களது அணுகுமுறைகள் குறித்து நாம் திருப்திப்படுவதாகயில்லை. ஆயினும், தமிழ் பேசும் மக்களது போராட்ட நியாயம் குறித்து சந்தேக மற்ற கருத்தில் உள்ளோம்.

நிகழ்கால அரசாங்கம் சமாதானத்தீர்வினை முன்வைப்பதனை அடிப்படையாகக் கொண்டே தேர்தல் வெற்றியினை சுலபமாக்கியது. முதலாளித்துவ நலன்களுக்காக உருவாக்கப்பட்ட இன்றைய யுத்தத்தை மிகப் பெரும்பாலான மக்கள் நிராகரித்தனர்; சமாதானத்தை ஆதரித்தனர். ஆயினும் அரசாங்கம் ஆரோக்கியமான முறையில் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதனைத் தவிர்த்துக் கொண்டு, அதற்காக சிலவகையான சின்ன சின்ன நியாயங்களை முன்வைத்துக் கொண்டு யுத்தம் ஒன்றினை வெண்தாமரை இலக்கின் கீழ் முன்னெடுத்துள்ளது. அரசின் இன்றைய யுத்தம் தமிழ் மக்களை மேலும், மேலும் ஆயுத அரசியலை நோக்கியே பாதிப்புச் செலுத்த உதவும் என்று நாம் நம்புகிறோம். அரசின் சமாதான யுத்தம் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை மரணத்துக்குள் நெருக்கியும், சாம்பல் மேடுகளில் அகதிகளாக்கியும் சாதனை படைத்துள்ளது. இதற்கு அப்பால் சமாதான யுத்தம் எதனையும் சாதிக்கவில்லை; சாதிக்கப்போவதுமில்லை. இத்தகைய நிலைமையின் கீழ் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வினை முன்வைத்து விடலாம் என்று அரசாங்கம் கருதுமாயின் அது அபத்தமான அரசியல் அனுபவங்களை மட்டுமே மிஞ்ச வைக்கும்.

தமிழ்த்தேசிய வாதத்தின் யுத்தம் தவிர்க்க முடியாத வகையில் நியாயமானதே. ஆயினும் தமிழ்த்தேசிய தலைமைகளின் சகோதர முஸ்லீம்களுக்கு எதிரான யுத்தத்தினை நாம் முழுமையாகக் கண்டிக்கிறோம். மூன்றாம் ஈழப்போர் ஆரம்பித்த பிறகு கிழக்கு முஸ்லிம்கள் மிகுந்த அச்சத்துடன் வாழ்கின்றனர். முஸ்லிம்கள் மீண்டும் தமது பாரம்பரிய பிரதேசங்களில் இருந்து துரத்தியடிக்கப்படலாம் என்று பயம் கொண்டுள்ளனர். இது ஆதாரமற்றது என்பதற்கான ஆதாரம் எதுவுமே இல்லை. தமிழ்த்தேசியவாதத்தின் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள்



தமிழ்த்தேசிய விடுதலை வரலாற்றில் கவலையுடன் நோக்க வேண்டியதாகும். இவ்வாறான சகோதர இனத்துக்கு எதிரான வன்செயல்கள் தமிழ்த் தேசிய விடுதலையில் சாதகமான முறையில் எதனையும் முன்னெடுக்காது .

சுரண்டலும், அநீதிகளும் மிகப்பரவலாகவுள்ள இன்றைய முதலாளித்துவ சமூகத்தின் குறியீடு யுத்தமாகும். யுத்தமற்ற உலகு என்பது வர்க்கமற்ற உலகத்தில் மட்டுமே சாத்தியமாகும். வர்க்கமற்ற உலகுக்கான அரசியல் பாதை சோஷலிசம் என்று நாம் திடமாய் அபிப்பிராயப்படுகின்றோம்.

யுத்தங்கள் சமூக வேறுபாடுகளால் சாத்தியமாகிறது. போட்டி மிகுந்த உலகத்தில் யுத்தம் தவிர்க்க முடியாதது. போட்டி இல்லாத, மனித நேயமுள்ள சமூக அமைப்பு இரத்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் உள்ளார்ந்த பலத்தைப் பெற்றுக் கொள்ளும். இன்றைய முதலாளித்துவ சமூக உற்பத்திக்கு மாற்றாக புதியதாய் எல்லோரும் எல்லாம் பெறும் சமத்துவ சமூக அமைப்புக்காக நேர்மையுடன் சிந்திப்பதும், உழைப்பதும் இன்றைய வரலாற்றுக் கடமை என்கிறோம். யுத்தத்துக்கு எதிரான இறுதித்தீர்வு இதுவாக அமையும் என்று உரத்துக் கூறுகிறோம்.

-விடிவு

## மலையக
## இளைஞர்களுக்கு விடுதலை எப்போது ?

மலையகத்தின் பல பகுதிகளிலும் கைது செய்யப்பட்டுள்ள மலையக தமிழ் இளைஞர் தொடர்பில் அவர்களை விடுவிப்பதற்கான எவ்வித எத்தனமும் மலையக தலைவர்களிடம் இருந்து எழவில்லை. அவர்களை காலத்துடன் மறக்கப்பட முடியாது.

இவர்களை விடுவிப்பதற்குள் புரட்சிகர கம்யூனிஸ்ட் கழகம் ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருப்பதனை நாம் வரவேற்கின்றோம்.

இவர்களது விடயத்தில் அக்கறை காட்டாத அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள் சமூக சேவை அமைப்புக்கள் மனித உரிமை குழுக்கள் பத்திரிகைகள் அனைத்தையும் வன்மையாக கண்டிக்கின்றோம்

ஹோமியோபதி வைத்தியர் சாந்தகுமார் பிரான்ஸிஸ் ஆறுமுகம் காளிமுத்து உட்பட சகல இளைஞர்களும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டுமென கோருகின்றோம்.

இவர்களை விடுவிப்பதற்காக இயக்கத்தில் சேருமாறு ஆர்வமுள்ளோரை அழைக்கின்றோம்.

ஆசிரியர் குழு

-விடிவு-

வாசகர்கள் கவனத்திற்கு: விடிவு சஞ்சிகையின் தொடர்பு முகவரி மாற்றப்பட்டுள்ளது. சகல தொடர்புகளையும் கீழ்வரும் முகவரியுடன் மேற்கொள்ளுமாறு தோழமையுடன் வேண்டுகின்றோம்.

விடிவு
பிரதம ஆசிரியர்,
368/1 நாகாவெல வீதி,
புதிய நகர்,
கொட்டிகாவத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தீர்வு யோசனைகள் ஒரு அரசியல் அணுகுமுறை

ஆர். எம். இம்தியாஸ் B.A. (Hons.) Pol. Sci
விரிவுரையாளர் தென்கிழக்கு பல்கலைக்கழகம்

மூன்றாவது ஈழப் போர் ஆரம்பிக்கப்பட்டு ஒரு முக்கிய காலகட்டத்தில் சர்வதேச நிர்ப்பந்தங்கள் காரணமாக இலங்கை அரசு தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைத்துள்ளது. மிக வெளிப்படையாக இவ் ஆலோசனைகளை நோக்கினால் ஆரோக்கியமாகத் தென்பட்டாலும் அடிப்படையிலேயே அரசின் ஆலோசனைகள் எதிர்முரண் விளைவுகளையே இலங்கை அரசியலில் தோற்றுவிக்கும் சாத்தியங்கள் உள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு வரலாற்றை அரசியல் மாணவன் எனும் நிலையில் நோக்குமிடத்து அரசின் புதிய யோசனைகள் ஒரு அழகான ஆரம்பத்தை உள்ளடக்கியுள்ளது. பண்டா - செல்வா உடன்படிக்கை, டட்லி - செல்வா உடன்படிக்கை, இலங்கை - இந்திய உடன்படிக்கை என்ற நீண்ட தீர்வுப் பொதிகளின் உள்ளடக்கங்களின் இருந்து அரசின் யோசனை முன்னேற்றகரமானதாகவே உள்ளது. இதற்கான மிக முக்கிய அடிப்படைக் காரணங்களாகக் கீழ்வரும் விடயங்கள் குறிக்கப்படுகின்றன.




1. **தமிழ்ப்புலிகளின் ஆயுதப் போராட்ட வளர்ச்சி**
2. **சர்வதேச முதலாளித்துவ வர்க்க நிர்ப்பந்தம்.**
3. **தமிழ்ப்புலிகளை தமிழ் மக்களின் எதிரியாக நிரூபிப்பது**

மேற்படி விடயங்களினை சாத்தியமாக்கவே தீர்வு யோசனைகள் ஏனைய தீர்வுத் திட்டங்களில் இருந்து வித்தியாசப்படுகின்றன. எவ்வாறாயினும் அரசின் தீர்வு யோசனைகள் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினை சாத்தியமாக்குவதில் பெருமளவில் தோல்விகளை அனுபவித்துள்ளன.

அரசின் தீர்வு யோசனைகள் இலங்கையினை பிராந்தியங்களின் ஒன்றியமாக்குவதன் மூலமாக எட்டு பிராந்திய சபைகளையும் ஒரு உப அதிகார அலகினையம் சிபார்சு செய்துள்ளது. அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமாத் திட்டவட்டமாக பிரிந்துள்ளன. தேசிய ரீதியில் முக்கியமான விடயங்கள் யாவும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் காணப்பட உள்நாட்டுப் பாதுகாப்பு, உள்நாட்டு வரி, காணி, உள்ளூர் பாடசாலை, வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு உதவி போன்ற உள்நாட்டு சட்ட உருவாக்கங்களும், நிர்வாக விடயங்களும் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தீர்வு யோசனையில் குறிக்கப்பட்டுள்ள உப அதிகார அலகு தொடர்பாக தீர்வு யோசனைகள் எவ்விதமான அதிகாரப் போக்குகளையும் உள்ளடக்கியிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இப் பிராந்தியங்களின் நிர்வாக எல்லைகள் சமகாலத் தேவைகளுக்கு ஏற்ப மீள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி வட,கிழக்கு மாகாண சிங்களப் பகுதிகள், அம்பாறை தொகுதி தவிர்த்து வட-கிழக்கு மாகாணம் சம்பாந்துறை, பொத்துவில், கல்முனையினை அடிப்படையாகக் கொண்டு உப அதிகார அலகும் சிறுபான்மை மக்களுக்காக (இனப் பிரச்சினைத் தீர்வுக்காக) முன்மொழியப்பட்டுள்ளன. அத்துடன் மத்திய அரசு பிராந்திய சபைகளினை கலைக்கும் அதிகாரத்தையும் இழந்தே காணப்பட்டது. தீர்வு யோசனையின் இவ் விடயங்கள் வரவேற்கத்தக்க முன்னேற்றத்தை ஓரளவாவது கடைப்பிடித்தது. ஆயின் அடிப்படையிலேயே இத் தீர்வு யோசனைகள் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக போதுமானதா என்று ணரும் போது இது அதிக காலம் கடந்த அதிகம் சிறிதான தீர்வு யோசனையாகவே வர்ணிக்கத்தக்கது.

அடிப்படையிலேயே இத் தீர்வு யோசனைகள் ஒரு ஆரம்பத்தை கொண்டுள்ளதனை நேர்மையுடன் அணுகும் போது உணரலாம். அவ்வாறாயின் இத்தீர்வு யோசனைகள் மேலதிகமான விடயங்களை உள்ளடக்கக் கூடியதான நெகிழ்வுத் தன்மையினையும் அனுசரிக்க வேண்டும் ஆயின் நிலைமைகள் இதற்கு முரணாக நடந்து வருகின்றன. அரசின் தீர்வு யோசனைகள் மிக ஆரம்பத்தில் பிராந்திய சபையினை கலைக்கும் அதிகாரத்தை உள்ளடக்கவில்லை. ஆயினும் அரசின் அதிகாரமிக்க அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் அவர்கள் கலைக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளதுடன் வடகிழக்கு இணைப்பு எவ்வகையிலும் சாத்தியமாகாது என்று கூறுவதன் மூலமாக சிங்கள மக்களை திருப்திப்படுத்த முயற்சி செய்துள்ளார். இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள் சிறுபான்மை தேசிய இனங்களைத் திருப்திப்படுத்துவதனையே குறியாகக் கொள்ள வேண்டும். சிறுபான்மை மக்கள் தமிழர்கள் என்பதற்காக, முஸ்லிம்கள் என்பதற்காக இலங்கை நாட்டில் ஒடுக்குதலுக்கு உள்ளாகும் போது தீர்வு யோசனைகள் இனரீதியில் அமைவதே புத்திபூர்வமானதாகும். வடக்கில் வாழும் தமிழ் பிரசைகளும் தெற்கில் வாழும் சிங்களப் பிரசைகளும் அடிப்படையில் சமமான பிரச்சினைகளை எதிர்நோக்கியதில்லை என்பதனை நாம் ஏற்க வேண்டும். அவ்வாறாயின் தீர்வு யோசனைகள் இவற்றை அடையாளம் காண்பதிலேயே திருப்திகரமான எல்லைகளை அடையலாம்.

சந்திரிகா குழு தேர்தல் வெற்றிக்கு முன்பு தமிழ் மக்களின் நண்பனாக தன்னை இனம் காட்டியது. தமிழ்க் கட்சிகளும் தீவிரமாக ஆதரித்தன. தமிழ்ப் புலிகளும் சந்தேகத்துடன் அவதானிக்கும் அளவுக்கு சந்திரிகா குழுவினர் சமாதானம் பற்றி ஆடம்பரமாக கதைத்தனர். தமிழ் மக்களும் ஆழமான ஆர்வத்துடன் ஆதரித்தனர். தேர்தல் வெற்றி சமாதான முயற்சிகளுக்கான ஆதரவினை நிரூபித்து நின்றது. சந்திரிகா அரசு இம்முறை தமிழ்ப் புலிகளுடன் கணிசமான சமாதான உடன்பாட்டை சாத்தியமாக்கும் எதிர்ப்பார்ப்புக்கள் பரவலாகின, அதிகமாகின. ஆயின் சந்திரிகா அரசின் அடிப்படை விசுவாசமற்ற செயற்பாடுகளினால், பிரச்சனையினைத் தீர்க்கும் நேர்மையான விருப்பு காணப்படாததால், தமிழ்ப்புலிகளை அந்நியமாக்கும் அரசின் குரோத நோக்குகளால், தமிழ்ப்புலிகளின் நியாயமான அடிப்படைக் கோரிக்கைகளினை அங்கீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிக்காததினால் தமிழ்ப் புலிகள் மூன்றாம் ஈழப்போரை முன்னெடுக்கும் இராணுவச் சூழலுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். சந்திரிகா அரசு தனது எதிர் யுத்த நிலையினை சமாதானத்துக்கான யுத்தம் என்று மிக அழகாக இம்முறை வர்ணித்தது. பொது எதிரி யார் என்பதனை சரியாக இனம் காணாத அல்லது இனம் காண விரும்பாத தமிழ் சமாதானப் பிரிவினர்களும் அரசின் சமாதான யுத்தத்தினை ஆவேசமாக ஆதரித்தனர்; புலிகளினை தமிழ் மக்களின் எதிரியாகக் கண்டனர்; அரசின் தீர்வு யோசனைகளை ஆராதித்தனர். சமாதானத் தீர்வு மகா முக்கியமானது. நேர்மையான சமாதான முயற்சிகளை அங்கீகரிப்பதும் அதனைவிட அவசியமானது. அவ்வாறான அங்கீகரிப்பினை அரசின் யோசனைகள் உள்ளடக்கியுள்ளதா என்பதே இங்குள்ள முக்கிய கேள்வி.

சிறுபான்மை மக்களது நிலையில் இனப் பிரச்சினை ஒரு வாழ்க்கைப் பிரச்சினையாகவே உள்ளது. தமிழ்ப்புலிகள் இயக்கம் என்பதற்கு அப்பால் அரசு என்ற அளவில் வளர்ந்த நிலை அடுத்த கட்டமாகும். இவ்விரு நிலைமைகளையும் நாம் உணர்ந்துக் கொள்வது கட்டாயத் தேவையாகும். பெரும்பாலான வேளைகளில் இது கசப்பான உண்மையாகலாம். ஆயின் அதுவே உண்மையானது ஆகும். சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரையில் தீர்வு யோசனைகள் இந்நிலையில் அமைவது அதிகப் பொருத்தமாகும். இதற்காக கீழ்வரும் அடிப்படைகளினை ஏற்று தீர்வு யோசனைகள் அமைவதே அவசியமாகும்.

1. **தமிழர்கள் ஒரு தேசிய இனம். தேசிய இனத்தின் பிரிபடாத உரிமை பிரித்து செல்வதாகும்.**
2. **வட-கிழக்கு - தமிழ் பேசும் மக்கள் தாயகம்**
3. **முஸ்லிம் மக்களுக்கான தனித்துவம்**
4. **மலையக மக்களுக்கான சுயாட்சி அலகு**

இவ் ஆலோசனைகள் பிரிவினையை நீதிப்படுத்துவதாகத் தோன்றலாம். இலங்கையில் தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதனால் அவர்களுக்கான முடிவினை தெற்கில் வாழும் சிங்கள மக்கள் தீர்மானிப்பது எவ்வகையிலும் நியாயமாகாது. அவ்வாறே வட,கிழக்கு முஸ்லிம் தாயகத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் முடிவினை வடபகுதி தமிழர் தீர்மானிக்க முடியாது. இவ்வாறான பரந்தளவு பார்வை தீர்வுயோசனைகளில் சாத்தியமாகும் போதே ஐக்கியத்துக்கான ஆர்வம் அதிகரிக்கும். பிரிந்து செல்வதினை எவ்வகையிலும் நியாயமாக்காத ஒரு தீர்வு யோசனைப் பொதி பிரிவினைக்கான யுத்தத்தை தடுத்து நிறுத்தும் உள்ளார்ந்த ஆற்றலை பெறும் என்பதனை என்னால் விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

சந்திரிகா அரசு மிகப் பெருமையாக முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் சிறுபான்மை மக்களது அபிலாசைகளைத் தீர்க்கும் அளவுக்கு ஆரோக்கியமானதா? மத்திய அரசு கலைக்கும் அதிகாரம் என்பது தேசிய பாதுகாப்பு, தேசிய இறைமை, ஒருமைப்பாடு என்பதில் இருந்து தோன்றுகிறது.

இலங்கையின் கடந்தகால அரசியல் வரலாற்றை நோக்குமிடத்து இலங்கையில் தேசியபாதுகாப்பு, தேசிய இறைமை என்பது எல்லாம் சிங்கள மக்கள் இறைமை, சிங்கள மக்கள் பாதுகாப்பாகவே கணிக்கப்பட்டுள்ளது. ஆதலால் தீர்வு யோசனையினைல் மாகாணத்தை கலைக்கும் அதிகாரம் என்பது சிங்கள மக்களுக்கு சார்பாக ஏற்படும் இருப்பினையே முக்கியப்படுத்தும். சிறுபான்மை மக்களது பாதுகாப்பு, சுயநிர்ணயம் என்பன தெற்கு சிங்கள மக்களது நகர்வுகளில் சாத்தியமாகாது என்பதனை சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

தமிழர்களுக்காக முன்வைக்கப்படும் தீர்வு யோசனைகள் அடிப்படையிலேயே வட, கிழக்கு தாயகக் கோட்பாட்டை இணைப்பின் அடிப்படையில் அங்கீகரித்தல் அவசியமாகும். தமிழர்கள் தமது தாயகத்தினை காப்பாற்றிக் கொள்வதற்காக நிறைவான விலையினை வழங்கி உள்ளார்கள். சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழ்த் தாயகத்தை நிர்மூமலமாக்குவதற்காக செயற்கைத்தனமான முயற்சிகளிலும் ஈடுபட்டன. ஆயினும் அது வெற்றிகரமான இலக்குகளை அடையவில்லை சந்திரிகா அரசு. சமாதானத்துக்கான யுத்தம் எனும் அடிப்படையில் தமிழ்த் தாயக பிரசைகளை கொன்றொழிக்கும் விதத்தில் யுத்தத்தினை முன்னெடுத்துள்ளது. இவ்வாறு தமிழர் தாயகத்தை அங்கீகரிக்காத தீர்வு யோசனைகள் தமிழ் மக்களது அபிலாஷைகளுக்கு சாதகமாக அமையாது என்று நம்பப்படுகிறது.

தமிழ் மக்களது சுயநிர்ணயம், தீர்வு யோசனைகளில் எவ்வகையிலும் அங்கீகரிக்கப்படவில்லை. இறுக்கப்பட்ட ஐக்கியத்தை மீண்டும் தீர்வு யோசனைகள் நெறிப்படுத்துகின்றன. அடிப்படையிலேயே இவ்விடயம் தமிழ் மக்களுக்கான தற்கொலைக்கு சமமாகவே அமையும். ஐக்கியமாக வாழ்வதா இல்லையா என்பதனை தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும். எம்முடன் தமிழர்கள் ஐக்கியமாக வாழ்தல் வேண்டும் என்று கூறுவது தெளிவான அடிப்படை உரிமை மீறல் விடயமாகும். ஐக்கியம், ஒற்றுமை என்பது முழுமையான சுயநிர்ணயத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது என்பதனை தீர்வு யோசனைத் தயாரிப்பாளர்கள் வசதியாக மறந்திருப்பது வேடிக்கையாகவுள்ளது.



முஸ்லிம்களுக்கான தேசம் என்பது இம்முறை அம்பாறை மாவட்டத்தின் அம்பாறைத் தொகுதி தவிர்ந்த சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் தொகுதிகளை அடையாளம் கண்டுள்ளது. ஆயினும் முஸ்லிம் தேசம் என்பது அம்பாறை மாவட்டத்தின் மேற்குறிப்பிட்ட மூன்று தொகுதிகளுடன் மட்டக்களப்பு, மாவட்ட தெற்கு பகுதிகளையும் திருமலை மாவட்ட முஸ்லிம் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். அரசின் தீர்வு யோசனைகள் இவற்றை கொஞ்சமாயினும் கவனத்தில் கொள்ளாதது முஸ்லிம் தேசத்தை தூண்டாயுள்ளதுடன் முஸ்லிம் தேசத்துக்கான தனிப் பிராந்திய அலகினையும் நிராகரித்துள்ளது.

முஸ்லிம்கள் நிர்வாக அதிகாரங்களை பிச்சை கேட்கும் ஒரு தேசியக் கூட்டமல்ல. ஏனைய தேசிய இனங்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் சமமாக அனுபவிக்கும் உரிமை முஸ்லிம்களுக்கும் காணப்படுகின்றன. சந்திரிகா அரசு இவ் உரிமையினை நேர்மையற்ற முறையில் மறந்துள்ளது. முஸ்லிம்களின் நலனில் இத்தீர்வு யோசனைகள் ஒரு சுருக்குக் கயிறு என்றாலும் பிழையில்லை.

வட-கிழக்கு முஸ்லிம் தேசத்துக்கு உபஅதிகார அலகினையாவது அதிகாரமற்ற முறையில் அறிமுகப்படுத்திய சந்திரிகா அரசு மலையக மக்கள் பற்றி வாய்திறக்காதது இலங்கை அரசியலில் ஒரு பிரிநிலைக் கோடாகும். கடந்த 175 வருடங்களாக இந்த மண்ணுக்காக உழைத்த மக்கள் பற்றி குறைந்தது ஒரு வார்த்தையாவது குறிப்பிடாதது வேதனையான நிகழ்வுப் போக்காகும்.

இந்நிலையில் மலையக மக்களுக்கு அரசின் தீர்வு யோசனை எந்த எச்ச சொச்சங்களையும் விட்டு வைக்காதது தீர்வு யோசனையின் சிங்களப் பேரினவாத சாராம்சத்தை நிரூபித்து நிற்கிறது.

சிறுபான்மை மக்களுக்கான தீர்வு யோசனைகள் கீழ்வரும் விடயங்களை உடனடியாக பூர்த்தி செய்வதன் மூலம் சாதகமான அரசியல் அபிவிருத்தியினை எதிர்ப்பார்க்கலாம்.

(அ) நிரந்தரமான யுத்த நிறுத்தம்

(ஆ) வட,கிழக்கு மீதான பூரண பொருளாதாரத் தடை நீக்கம்

(இ) நான்கு பிராந்திய அலகுகள் சிபார்சு செய்யப்படல் வேண்டும். வடகிழக்கு தமிழ்ப்பகுதிகளை இணைத்த பிராந்தியம், வட-கிழக்கு முஸ்லிம் தேசத்தை உள்ளடக்கிய பிராந்தியம், சிங்கள மக்களுக்கான தென்பகுதி பிராந்தியம், மலையக மக்களுக்கான மலையகப்பகுதிகளை இணைத்த பிராந்தியம்.

(ஈ) தமிழ்த் தாயகம், சுயநிர்ணயம் என்பன அங்கீகரிக்கப்படல்

தமிழ்ப்புலிகள் பாசிசத்தன்மையினைக் கொண்ட அமைப்பினர் என்பது பொதுவான உண்மை எனினும் தமிழ்ப்புலிகளினை அந்நியமாக்குவது என்பது தெற்கு மக்கள் விவகாரமல்ல. அது தமிழ் மக்களின் அரசியல் கடமையாகும். தமிழ்ப்புலிகளினை முழுமையாக மறுக்க வேண்டும். அவர்களை இராணுவத்தினர் தோற்கடித்து விட வேண்டும் என்றெல்லாம் கூறிக்கொண்டு தீர்வு யோசனைகளினை அமுல்படுத்த முன்வருவது எந்த விதமான முன்னேற்றத்தையும் உறுதிப்படுத்தாது. சந்திரிகா அரசின் தீர் யோசனைகளின் பின்புலத்தில் இவ்விடயம் அதிகமான கவனத்தைப் பெற்றுள்ளது உணரக்கூடியதாகவுள்ளது. பிரிந்துள்ள இலங்கையின் தேசங்களை மீண்டும் ஐக்கியப்படுத்துவது என்பது பூரண அரசியல் நேர்மையின் அடிப்படையில் தங்கியுள்ளது. பாராளுமன்ற அதிகாரத்தை இலக்காகக் கொள்ளும் பேரினவாத அரசியல் தொடரும்வரை இலங்கையின் ஐக்கியம் பற்றி கனவுகளை மட்டும் அழகாக காணலாம் என்பதினை கூறியாக வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கு மாகாணமும் முஸ்லீம் தேசத்தில் அதன் பாதிப்பும்

- வேலுச்சாமி -

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தின் ஒரு பகுதி பிராந்திய சபை என்னும் வடிவத்தில் பல்வேறு இழுத்தடிப்புக்கு மத்தியில் தற்போது வெளிவந்துள்ளது. தீர்வுத்திட்டத்தின் முக்கியமான விடயமான வடக்கு கிழக்கு இணைப்பு அதன் தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்படும் என்றும் இதற்கான முடிவுகள் சிங்கள, தமிழ் முஸ்லிம் சமூகத்துப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின் எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அரசின் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டாலும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருக்கும் சிங்கள பிரதேசங்களை அருகிலுள்ள சிங்கள மாவட்டத்துடன் இணைத்து விட்டு எஞ்சிய தமிழ் முஸ்லிம் பகுதிகளை ஒரு பிராந்திய சபையின்கீழ் இயங்க விடுவது என்றும் இப்பிராந்திய சபையில் முஸ்லிம் மக்களுக்கு அம்பாறை மாவட்டத்தின் பிராந்திய உப அலகு என்ற வகையில் தென்கிழக்கு மாகாணசபை அமைப்பு ஒன்றை உருவாக்குவது என்றும் முடிவுகள் எடுத்துள்ளதாக அரசு தரப்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் செய்திகளை மெய்ப்பிக்கும் வகையில் யூலை மாதம் 30ம் திகதி வெளிவந்த சண்டே டைம்ஸ் ஆங்கில பத்திரிகை வடக்கு-கிழக்கு மாகாணத்தின் தற்போதைய எல்லைகளையும், அரசு புதிதாக உருவாக்கப்போகின்ற எல்லைகளையும் வரைபடம் மூலம் வெளியிட்டதோடு அம்பாறை மாவட்டத்தில் அமைய இருக்கின்ற தென்கிழக்கு மாகாண சபையின் வரைபடத்தையும் அதில் குறித்திருந்தது.

முஸ்லீம் மக்களின் ஏகோபித்த தலைமை என்று கூறிக் கொள்ளும் முஸ்லீம் காங்கிரஸ் ஆரம்பத்தில் இதனை எதிர்த்த போதும் பின்னர் அரசுக்கும் தனக்கும் உள்ள உறவுக்குப் பங்கம் ஏற்படும் என்ற காரணத்தால் அரசின் முடிவுகளுக்கு பச்சைக் கொடி காட்டியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் வடக்கு-கிழக்கு வாழ் சகல முஸ்லீம் மக்களையும் இணைந்த முஸ்லீம் மாகாண சபைக் கோரிக்கையை அது கைவிட்டுள்ளது. இச்செயற்பாடானது முஸ்லீம் காங்கிரஸ் அம்பாறை காங்கிஸாகக் குறுகி ஒரு அவலத் தோற்றத்தினை எடுத்துள்ளது.

இந்நிலையில் அமைக்கப்போகும் தென்கிழக்கு மாகாண சபை முஸ்லீம் மக்கள் தொடர்பாக எத்தகைய பாதிப்புகளை உருவாக்கும் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வடக்கு- கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்களின் நிலை மிகவும் சிக்கலானது. இதனால் அங்கு வாழும் முஸ்லீம்கள் தொடர்பாக அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுப்பது அவசியமானதாகும்.

1. முஸ்லீம் மக்களின் ஐக்கியம்
2. முஸ்லீம் மக்களின் பிரதேசங்களும் அதன் பாதுகாப்பும்
3. சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கக்கூடிய அதிகாரங்கள்
4. முஸ்லீம் தமிழர் உறவு

அரசினால் முன்வைக்கப்பட்ட தென்கிழக்கு மாகாணசபைத் தீர்வு இந்த விடயங்களை கவனத்தில் எடுத்ததா என்றால் இல்லை என்றே கூற வேண்டும்.

வடக்கு- கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்கள் ஒரே வகையான அரசியல் விதியானாங் பிணைக்கப்பட்டிருக்கின்ற ஒரு தனியான சமூகமாகவே இன்று உள்ளனர் இதனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லேயே ஒரேவகையான அரசியல் விதியினால் பிணைக்கப்பட்ட ஒரு தேசமாக எழுச்சியடைந்துள்ளனர். இத்தேச உணர்வு தான் பல்வேறு கட்சி, பிரதேச வேறுபாடுகளை கடந்து தனியான நிர்வாக அலகுக் கோரிக்கையை முன்வைக்கவும் முஸ்லீம்களின் ஏகோபித்த ஸ்தாபனமாக முஸ்லீம் காங்கிரஸ் வலிபும் காரணமாக அமைந்தது. இவ் உணர்வு பொத்துவிலிருந்து யாழ்ப்பாணம் முஸ்லீம் வட்டாரம் வரை பரந்திருந்தது. சிங்களப் பேரின வாதத்திற்கும், தமிழ் இனவாதத்திற்கும் இடையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற வடக்கு கிழக்கு முஸ்லீம் சமூகத்திற்கு தனது ஒடுக்கு முறைக்கு எதிராக போராடுவதற்கு சகல முஸ்லீம் மக்களையும் அணிதிரட்டுவதற்கான ஆயுதமாகவும் இத்தேச உணர்வு தான் விளங்கியிருந்தது.

அரசின் உத்தேச தென்கிழக்கு மாகாண சபை இத்தேச உணர்வை சிதறடிக்கப் போகின்றது. முஸ்லீம்களை குழுக்குழுவாக பிரதேச ரீதியாக சிதைக்கப் போகின்றது. ஏற்கனவே சிறிதளவில் உருவாகி இருந்த சிறிய சிறிய முரண்பாடுகளையும் கூட பெரிதாக வளர்த்து விடப் போகின்றது. மட்டக்களப்பு , திருகோணமலை மாவட்ட முஸ்லீம்களும் வடக்கு முஸ்லீம்களும் தாம் முஸ்லீம் காங்கிரஸினால் வஞ்சிக்கப்பட்டுள்ளோம் எனப் பேசத் தொடங்கியுள்ளார்கள்.

வடக்கு முஸ்லீம்களைப் பொறுத்தவரை தாம் முஸ்லீம்கள் மத்தியில் ஓர் இரண்டாம் தர பிரஜையாகவாழ்கிறோம் என்ற உணர்வு ஏற்கனவே மேலோங்கியிருந்தது. வடக்கில் இருந்து புலிகளால் துரத்தப்பட்டு நான்கு வருடங்களாக அகதிகளாக துன்ப வாழ்க்கை வாழ்கின்ற போது கஷ்டங்கள் பிரச்சினையில் முஸ்லீம் காங்கிரசோ, முஸ்லீம் சமூகமோ போதிய அக்கறை எடுக்கவில்லை என்ற மனக்குறை அவர்களிடம் இருந்து வருகின்றது. இதைவிட கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் தலைமையால் அவர்களின் ஆதிக்கத்திற்கு தாம் உட்பட்டு தாங்கள் அரசியல் ரீதியாக தாழ்ந்து விடுவோமோ என்ற அச்ச நிலையும் அவர்களிடம் காணப்படுகின்றது. குறிப்பாக வடக்கில் அரசியல் ரீதியில் ஓரளவு பலம் வாய்ந்த தன்மையுடன் விளங்குன்ற மன்னார் முஸ்லீம்களிடமே இவ்வுணர்வு மேலோங்கி காணப்படுகின்றது. இதைவிட முஸ்லீம் காங்கிரசின் அரசியல் முன்னெடுப்புக்களில் பல (போருக்கு ஆதரவு தெரிவித்தால் அரசுடன் சேர்ந்திருத்தல் ) தமிழர்களின் தேசிய போராட்டத்துக்கு எதிராக இருப்பதால் தமது முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவு நிலையானது தமது மீள் குடியேற்றத்தை தடுத்து விடுமோ என்கின்ற அச்சமும் அவர்களிடம் காணப்படுகின்றது.

எனினும் முஸ்லீம்களின் அரசியல் தேவையும், ஒரு தேசமாக வளர வேண்டிய வரலாற்றுப் போக்கும் ஒடுக்குமுறைகள் கொடுமையும் மேற்கூறிய அதிருப்திகளுக்கு மத்தியிலும் வடக்கு- கிழக்கு முஸ்லீம்களின் பொது அரசியலோடு அவர்களை இணைக்க வைத்தன. முஸ்லீம் காங்கிரசின் பின் அணிதிரளும் நிலையையும் தோற்றுவித்தன. 1989 தேர்தலில் வன்னிமாவட்டத்தில் இருந்து முஸ்லீம் காங்கிரஸ் பிரதிநிதியாக அபூபக்கர் தெரிவு செய்யப்பட்ட நிலையும் 1994 தேர்தலில் வன்னி, யாழ்பாணம் மாவட்டங்களிலிருந்து அபூபக்கர், இஸ்மாயில் என்போர்கள் முஸ்லீம் காங்கிரசிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நிலைமைகளும் இதனையே காட்டுகின்றன.

ஆனால் தென்கிழக்கு மாகாண சபை அமுங்கிப் போயிருந்த அவர்களின் அதிருப்திகளை தற்போது மிகுந்த ஆக்ரோசத்தோடு மேலெழ வைத்துள்ளது. உத்தேச தென்கிழக்கு மாகாணசபையை அவர்கள் கர்ண கடூரமாக எதிர்க்கின்றார்கள். முஸ்லீம் காங்கிரஸ் தங்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டது என வாய்விட்டு கத்துகின்றார்கள் . முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம்களுடைய காங்கிரஸ் என்ற நிலைமாறி அம்பாறை காங்கிரசாக சீரழிந்து உள்ளது என்றும் கோபத்துடன் கூறுகின்றனர்.

மட்டக்களப்பு, திருக்கோணமலை முஸ்லீம்களும் இதே நிலையிலேயே காணப்படுகின்றனர். முஸ்லீம் காங்கிரஸின் முன்னைய முஸ்லீம் மாகாண சபை கோரிக்கைகளில் தமது பிரதேசங்களும் உள்ளடக்கியதாலே தேசிய கட்சிக்களுக்கான ஆதரவுகளை மாற்றி முஸ்லீம் காங்கிரசை ஆதரித்தவர்களும் தற்போது அது தங்களுக்கு துரோகம் செய்து விட்டதாகவும் கூறுகின்றார்கள். ஏற்கனவே அபிவிருத்திகளில் கூட தங்களுடைய பிரதேசங்கள் புறக்கணி

க்கப்பட்டு அம்பாறைக்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள். பல்கலைக்கழகம் துறைமுகம், போதனா வைத்தியசாலை என்பன அங்கேயே திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டார்கள். பிரதான முஸ்லீம் பிரதேசத்தில் அவை அமைக்கப்படுகின்றன, என்பதால் நாம் அவற்றை பெரிதுபடுத்தவில்லை. இன்று அவற்றின் தொடர்ச்சியாக தென்கிழக்கு மாகாண சபையை முஸ்லீம் காங்கிரஸ் ஏற்கும் போதே வெறும் கறிவேப்பிலையாக நாம் வீசப்பட்டுள்ளோம் என்பதை உணர்கிறோம் என அவர்கள் கூறிக் கொள்கின்றனர்.

தென்கிழக்கு மாகாணம் உருவாக்கிய இரண்டாவதுபிரச்சினை முஸ்லீம்களின் பிரதேசம் பற்றியதாகும். ஒரு சமூகத்தின் இருப்பிலும் அதன் பலத்திலும் பிரதான இடம் வகிப்பது அவர்களுக்கு சொந்தமான நிலங்களும் அவற்றில் உள்ள வளங்களுமே . அரசின் உத்தேச தீர்வுத் திட்டம் முஸ்லீம்களின் பிரதேசங்களை சூறையாடப் போகின்றது.

உத்தேசத் தீர்வுத் திட்டத்தின்படி வடக்கு-கிழக்கில் உள்ள சிங்கள் மக்களின் குடியேற்றங்கள் அருகிலும் சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கப்படப் போகின்றன. இக்குடியேற்றங்கள் அனைத்தும் சுதந்திரத்திற்கு பின்னர் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவையாகும். இதனால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட முஸ்லீம்களின் பிரதேசம் அம்பாறை மாவட்டமே.

அம்பாறை மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட கல்லோயாத் திட்டத்தின் மூலமும் தீகவாவி புனித பிரதேசத்திட்டத்தின் மூலமும் முஸ்லீம்களுக்கு சொந்தமான ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் பறிக்கப்பட்டது . இன்று சிங்கள் பிரதேசங்களை சிங்கள மாவட்டத்துடன் இணைத்தல் என்ற பெயரில் குளங்கள், சமுத்திரங்கள் போன்ற நீர் வளங்களும் பறிக்கப்படப் போகின்றன. குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லீம் மக்களின் நீர்வளமாக இருக்கும் சேனநாயக்க சமுத்திரம் சிங்களப் பிரதேசத்தின் ஆதிக்கத்திற்குள் வரப் போகின்றது.

திருமலை மாவட்டத்திலும் இதேநிலையே காணப்படுகின்றது, அங்கு உருவாக்கப்பட்ட பதவியா குடியேற்றத்திட்டம் ஏற்கனவே முஸ்லீம் மக்களின் நிலங்களை விழுங்கியிருந்தது. இன்றுஅவை சிங்கள பகுதிகளோடு இணைத்தல் என்ற என் பேரில் அவர்களின் நீர்நிலைகளும் இணைக்கப்படப் போகின்றன. குறிப்பாக பதவியாக்குளம் போன்ற பிரதான நீர் நிலைகள் பறிபடப் போகின்றன.

இவ்வாறு தாயக மண்ணும் அதன் வளங்களும் பறிக்கப்படுகின்ற போது முஸ்லீம் காங்கிரஸ் எதனை வைத்து தனது மக்களுக்கு வாழ் வளிக்கப் போகின்றது. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் என்ற அரசியல் அரிச்சுவடியைக் கூட முஸ்லீம் காங்கிரஸ் மறக்க நினைப்பது கவலைக்குரியதாக உள்ளது.

மேலும் ஒரு சமூகத்தின் சுயநிர்ணய உரிமைக்கு அச்சமூகத்திற்கு தனது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் பிரயோகிக்கக்கூடிய அதிகாரங்கள் இருப்பது அவசியமானதாகும்.

உத்தேச அரசியல் திட்டத்தில் அம்பாறை மாவட்டத்திற்கு வெளியே உள்ள முஸ்லிம் பிரதேசங்களில் இதற்கான சாத்தியங்கள் அறவேயில்லை என்பது வெள்ளிடைமலை. சரி அம்பாறை மாவட்டத்தில் அமைக்கப்படப் போகின்ற தென்கிழக்கு மாகாண சபை அமைப்பில் அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றதா என்றால் இல்லையென்றே கூற வேண்டும். ஏனெனில் தென்கிழக்கு மாகாணசபை பிராந்திய சபைக்கான அமைப்பில். ஒரு உபபிராந்திய அமைப்பே. உத்தேசத்திட்டத்தின் படி பிராந்திய அமைப்புகளுக்கு அதிகாரங்கள் பங்கிடப்பட்டிருக்கின்றதே தவிர உபபிராந்திய அமைப்புகளுக்கு அதிகாரம் பங்கிடப்படவில்லை. இந்நிலையில் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு ஒதுக்கப்படாத உபபிராந்திய அமைப்பைப் பெற்று என்ன பயன் ?

சரி பேச்சுக்கு பிராந்திய சபைக்கான அதிகாரங்கள் தென்கிழக்கு மாகாண அமைப்புக்கும் கிடைத்து விட்டது என வைத்துக் கொள்வோம். இருப்பினும் அதனால் ஒலுவில் துறைமுகத்தையும் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத காரணம் உத்தேச திட்டத்தின் படி பல்கலைக்கழக, துறைமுக அதி



காரங்கள் மத்திய அரசுக்கு உரியவையே. பல்கலைக்கழகமும் முஸ்லீம் மக்களுக்கு மட்டுமே உரிய ஒன்றல்ல. மூவினத்துக்கும் உரிய ஒன்று. இதனால் பல்கலைக்கழகத்தை மையமாக வைத்து அமைக்கப்படும் சிங்கள குடியேற்றங்களையோ துறைமுகத்தை மையமாக வைத்து அமைக்கப்படும் சிங்கள குடியேற்றங்களையோ தென்கிழக்கு மாகாண சபையால் தடுத்து விட முடியாது. திருமலையில் தொழிற்சாலைகளை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட பிரிமா ஆலை குடியேற்றம் போன்ற கைத்தொழில் குடியேற்றங்களை இது விடயத்தில் மறந்து விடக் கூடாது.

தென்கிழக்கு மாகாண அமைப்பினால் தோன்றிய நான்காவது பிரச்சினை வடக்கு - கிழக்கில் நிலவும் தமிழ் முஸ்லிம் உறவு பற்றியதாகும். இப்பிரச்சனையின் தீவிர உளவியல் தன்மையை தமிழ்த்தரப்பு உணரவில்லை என்று பார்க்க முஸ்லீம் தரப்பும் உணரவில்லை போலத் தெரிகின்றது.

உண்மையில் இதுவிடயத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லீம்களின் நிலை மிகவும் சிக்கலானது. அவர்கள் தொடர்ச்சியான நிலப் பரப்பில் வாழவில்லை. குழம்பிட்டால் இருக்கும் பிட்டும், தேங்காய்ப்பூவும் போல அவர்கள் தமிழ் மக்களுடன் கலந்தே வாழ்கின்றார்கள். அவர்களது வாழ்விடங்கள் மட்டுமல்ல பொருளாதார மூலங்களான விவசாய நிலங்கள் வர்த்தக நிலையங்கள் என்பன தமிழ் மக்களின் பிரதேசங்களை ஒட்டியே இருக்கின்றன. தென்கிழக்கு மாகாண சபை அமையப் போகின்ற முஸ்லீம்கள் கூடுதலான வீதாசாரத்தில் வாழ்கின்ற அம்பாறை மாவட்டத்தில் கூட இந்நிலையே காணப்படுகின்றது.

இதனால் முஸ்லீம்கள் தொடர்பாக எத்தகைய தீர்வுத் திட்டங்களை கொண்டு வந்தாலும் அதன் நடைமுறைப்பயன்பாடு தமிழ்-முஸ்லீம் உறவிலேயே தங்கியுள்ளது, இதுபற்றி அம்பாறையைச் சேர்ந்த சட்டத்தரணி நிஸார் அவர்கள் முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியின் கருத்தரங்கில் பேசும் போது '' தீர்வுத் திட்டங்கள் எதனையும் நாம் உருவாக்கலாம், சட்டங்களாகக் கூட அவற்றை வரைந்து கொள்ளலாம் ஆனால் அவற்றில் நடைமுறைப்பயன் தமிழ் -முஸ்லீம் புரிந்துணர்விலேயே தங்கியுள்ளது'' எனக் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது இங்கு உறவு அல்லது புரிந்துணர்வு என்பது ஒருவருக்கொருவர் பணிந்து போவதல்ல. மாறாக சமத்துவத்தின் அடிப்படையில் இணைந்து கொள்ளலே ஆகும். இது விடயத்தில் ஒரு சமூகத்திற்கு தான் சார்ந்த சமூகத்தின் மீதான பொறுப்புணர்வும் மட்டும் இருந்தால் போதாது. தன்னோடு இணைந்து வாழ்கின்ற மற்றைய சமூகத்தின் மீதான பொறுப்புணர்வும் அவசியம். இது தமிழ்ச் சமூகத்திற்கும் பொருந்தும். முஸ்லீம் சமூகத்திற்கும் பொருந்தும்.

தென்கிழக்கு மாகாண அமைப்பு இவ்விடயத்தை கவனத்தில் எடுக்கவில்லை அம்பாறை மாவட்டத்திற்கு வெளியே இருக்கும் தமிழ்-முஸ்லீம் உறவு தொடர்பாக மட்டுமல்ல. அம்பாறை மாவட்டத்தில் கூட இதுவிடயம் கவனத்தில் எடுக்கவில்லை.

உண்மையில் இது விடயத்தில் வடக்கு-கிழக்கு எங்கும் வாழும் முஸ்லீம் மக்களின் நலன்களைப் பேணும் வகையில் தமிழ் மக்களோடு சமத்துவமாகி இணைந்த ஒரு தீர்வு பற்றி இரு தரப்பினர்களும் பரிசீலிக்காதது கவலைக்குரியது. எதிர்காலத்திலாவது இதற்கான முயற்சி நடைபெறலாம் என்றால் தென் கிழக்கு மாகாண அமைப்பு அதனையும் குழப்பியுள்ளது.

எனவே இறுதியாக உத்தேச தென்கிழக்கு மாகாண அமைப்பு எந்த விதத்திலும் முஸ்லீம்களின் நலன்களுக்கு பொருத்தமானதாக தெரியவில்லை. இரு பக்கங்களாலும் ஒடுக்கப்படுகின்ற சிறுபான்மைத் தேசிய இனம் என்ற வகையில் முஸ்லீம் மக்கள் இது தொடர்பாக நுணுக்கமாக பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும் . முஸ்லீம்களின் தேசம் கருக்கொண்டு எழுச்சியுற்ற வேளை அதனைக் கருவிலேயே சிதைத்துள்ளீர்கள் என்ற வரலாற்றுப் பலி வரவிடாமல் பார்த்துக் கொள்வது இன்றைய முஸ்லீம் தலைமுறையின் பிரதான பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலிபீடத்தில் மலையக மக்கள்

— பொன். பிரபாகரன் —

மலையக மக்களின் மூலவேராகவும், மிகப்பெரிய பாட்டாளி வகுப்பாகவும் திகழும் தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு இனி வரும் நாட்கள் கடினமான சவால்கள் எதிர் கொள்பவையாக இருக்கப்போகின்றன.

அரசாங்கத்தின் தான் தோன்றித்தனமான செழுமையற்ற பொருளாதார அணுகுமுறை, பேரினவாத கும்பல்களின் தாக்குதல்கள் பொலீஸ் அத்துமீறல்கள் மலையக இளைஞர் வேட்டையாடப்படல் தொழிலாளர் விரட்டப்படல் என்பனவற்றோடு புதிது புதிதாக முளை விடும் சாதி, சமய சங்கங்களும் தொழிற் சங்கங்களும் மலையக தொழிலாளர் வகுப்பை நிர்மூலமாக்கி விட கங்கணம் கட்டி நிற்கின்றன.

## தனியார் மயப்படுத்தல் :

தோட்டத் தொழிற்துறையை நீண்டகால குத்தகையடிப்படையில் 50 வருடங்களுக்கு ஏகாதிபத்திய பல்தேசிய கம்பெனிகளுக்கு வழங்கவும் அதன் மூலம் தோட்டத்துறை நெருக்கடியை சமாளிக்வும், பாதுகாப்பு செலவினங்களுக்கு நிதி திரட்டவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. தோட்டத் தொழிற்சங்கங்களின் கடும் ஆட்சேபனைக்கு மத்தியிலும் இந்நடவடிக்கையில் இறங்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதன் உண்மை நோக்கம் தோட்டத் தொழிலாளர்களை மேன் மேலும் சுரண்ட பல்தேசிய கம்பெனிகளுக்கு வழிவிடுவதன் மூலம் தம் ஏகாதிபத்திய எஜமானரையும் உ லக வங்கி ல சர்வதேச நாணய நிதியம் என்பன வற்றையும் திருப்தி ப்படுத்துவதுதான். இடைக்காலத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் தனியார் கம்பெனி நிர்வாகங்கள் தோட்டத் தொழிலாளரை மிகமோசமாக சுரண்டுவதற்கு முயன்று வந்திருக்கின்றன.

1. வேலைப்பளு அதிகரிக்கப்பட்டமை.
2. வேலை நேரம் கூட்டப்பட்டமை.
3. சம்பளவுயர்வுகள் மறுக்கப்பட்டமை.
4. கடும்கண் காணிப்பு மேற்கொள்ளப்பட்டமை.
5. சமூக நல வசதிகள் வெட்டப்பட்டமை
6. பராமரிப்பு கைவிடப்பட்டமை.
7. தோட்டவளங்கள் சுரண்டப்பட்டமை
8. மாற்றுப்பயிர் செய்கைக்கு பெருந் தோட்டம் அழிக்கப்பட்டமை.
9. பெரும்பாலான ொழிலாளர் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டமை
10. தொழிலாளர் தோட்டடங்களின் மீது பொலீஸ் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டமை.

ஆகிய அம்சங்கள் குறித்து எவ்வித மீளாய்வும் மேற்கொள்ளப்படாமல் குத்தகையை நீடிப்பது அல்லது புதிதாக குத்தகைக்கு விடுவது திட்டமிடப்பட்ட சதியாகும். மலையக தொழிலாளர் வகுப்பின் முதுகெலும்பை முறிக்க ஆளும் வர்க்கம் எடுக்கின்ற இந்நடவடிக்கை மலையக மக்களை பலிபீடத்தில் ஏற்றுவதற்கு சமனானதாகும்.

## முழுக்கூட்டு ஒப்பந்தம் :-


தோட்டத்துறை தொழிற்சங்கங்கள் நீண்ட கால குத்தகைக்கு தோட்டங்கள் கையளிக்கப்பட்டால் அரசங்கம், கம்பெனிகள் , தொழிற்சங்கங்களுக்கிடையிலான முக்கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டுமெனவும் அதன் மூலம் தொழிலாளர் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவம் கோருகின்றன.



உண்மையில் இலங்கையின் மிகப்பெரிய பாட்டாளி வகுப்பொன்று தன் முழுப்பலத்தையும் பிரயோகித்து தம் நலன்களை பாதுகாக்க முடியவில்லையென்றால் முக்கூட்டு ஒப்பந்தம் எவ்வகையில் ''நலன்களை'' பாதுகாக்கும். யாருடைய நலன்களை பாதுகாக்கும்? உண்மையில் தோட்டத் தொழிற்சங்கங்கள் தம் கையாலாகா தனத்தை மூடிமறைக்க முயலாமல் தொழிலாளர்களை போராட்டத்திற்கு தயார் படுத்த வேண்டும் . அதுவே தொழிலாளர் நலன் பேணும் சிறந்த வழியாகும்.

தோட்டங்களை அரசாங்கம் நடத்த முடியாவிடில், தொழிலாளர் நிர்வாக குழுக்களிடம் தோட்ட நிர்வாகங்களை கையளிக்குமாறு கோர வேண்டும் எங்களது நலன்களை நாமே தீர்மானிப்பது மட்டுமே எமக்குள்ள ஒரே வழி?

மாறாக துரோகத்தனமான சந்தர்ப்பவாதம் காட்டும் தொழிற்சங்கங்களால் முழு தொழிலாளர் வகுப்பிற்கும் பெருங்கேடு வந்து சேரும்.



## பேரினவாத தாக்குதல்கள் :

மலையக மக்களுக்கெதிரான வன்முறைத் தாக்குதல்கள் மிகவும் ஒன்றிணைந்த முறையில் தொடர்சசியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கனவுகளின் மேல் சிருஷ்டிக்கப்பட்டு கானல் நீராகிப் போயிருக்கின்றது. ஓவல, பிரே, கோண, எடிக்கா, நரகஸ்தனை, கிக்ககினாகந்த, ஆகிய தோட்டங்கள் இதுவரை தாக்குதலுக்குள்ளாகியிருக்கின்றன. குறிப்பாக தென்புற மாவட்டங்களான காலி, மாத்தறை, களுத்துறை, மாவட்டங்களிலும் மாத்தரை மாவட்டத்திலும் தமிழ் தொழிலாளர்கள் மீதான தாக்குதல்கள் அரசியல் வாதிகள்பாதுகாப்பு துறையினரின் ஆசியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

## இளைஞர் கைதுகள் :

மலையக இளைஞர்கள் சந்தேக நபர்களாக்கப்பட்டு பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்படும் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகிறது. நுவரெலியா, மாவட்டத்தில் பெருமளவான சுற்றி வளைப்புக்களும் கைதுகளும் மேற்கொளளப்படுகின்றன.

கடந்த ஆகஸ்ட் மாத பொதுத் தேர்தலின் பின்னர் கைதான மலையக இளைஞர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

வைத்தியர் சாந்தகுமார், மலையக விடுதலை முன்னணி அமைப்பாளர் பிரான்சிஸ், மலையக விடுதலை முன்னணியினர் எனக் கூறப்படும் முத்து ஆகியோரும் அடங்குகின்றனர். முழு மலையகத்தின் நுழைவாயிலும் கடும் சோதனை கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதும் உறவினர் நண்பர்களை தேடிவருவோர் கைதாக்கப்படுவதும் அன்றாட நிகழ்வாயிருக்கின்றது.

தலைநகர் கொழும்பிலும் புறநகர் பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான மலையக இளைஞர்கள் சுற்றிவளைப்பு, கைதுகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள்.


தோட்டத்துறையில் தற்காப்பின் நிமித்தம் போரால் தொழிலாளர்களை பயங்கரவாதிகளாக சித்தரிப்பதில் பாதுகாப்பு துறை புலனாய்வாளர்கள் முன்னிற்கிறார்கள் குளுத்துறை கிக்கினாந் தோட்டத் தொழிலாளர் கசிப்பு வியாபாரிகளான (நாட்டு ) கிராமிய மக்களால் தாக்கப்பட்டு செல்லையா என்ற தொழிலாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை செய்யப்பட்டு முள்ளார். எனினும் 15 தமிழ் தோட்டத் தொழிலாளரை ஒப்படைக்கு மாறு கோரிய பொலீஸ் அவர்களை சிறைச் சாலையில் தடுத்து வைத்துள்ளது.

ஜுன 4ம் திகதி காலி நகஸ்ததென தோட்டத் தொழிலாளர் தாக்கப்பட்டு லயன் எரிக்கப்ப ட்டதோடு 8 வயது சிறுமி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்களை தட்டிக் கேட்கவோ தடுத்து நிறுத்தவோ முடியாத நிலையில் மலையக



தொழிற்சங்கங்களும் அரசியல் தலைவர்களும் இருப்பது மலையக மக்களின் நலனை விட தம் நலனை கைவிடத் தயாரில்லாத நிலைப்பாட்டை அம்பலப்படுத்துகின்றது.

நோர்வூட் தென் மதுரை தோட்டத் பெண் தொழிலாளர் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் வேலை நிறுத்தப் போராட்டத்தை முறியடித்த நோர்வூட் பொலீசார் தொழிலாளர்கள் மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலைகள் ஆக்கிரமிப்பு மையங்கள் :-சனாதிபதி பிரேமதாசாவின் 200 ஆடை தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தின் ஒரு படியாக மலையகத்தின் பல பகுதியில் தோட்டக் காணிகளில் ஆரம்பிக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் படிப்படியாக குடி யேற்றங்களாக மாறிவிட வாய்ப்பிருக்கின்றது.

இவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசாலமான இடவசதியும் ஆளணியிடலில் கட்டப்பட்டுள்ள பாராபட்டசமும் இதனை முன்னுணர்த்து கின்றது.

மேலும் இவ் ஆடைத் தொழிற்சாலைகளில் இரவு, பகல் இரண்டு முறைகளில் இளம் பெண்கள் மிக மோசமாக சுரண்டப்படுவதோடு, பாலியல் இச்சைகள் குறைந்த சம்பளம் போதிய சுகாதார வசதிகள் இல்லாமை, பாதுகாப்பின்மை தொழில் நிரந்தர மின்மை, தொழிற்சங்க உரிமையின்மை என பல்வேறு ஒடுக்கு முறைகளை சந்தித்து வருகின்றனர்.

**கல்வி :-**

மலையக தமிழ் மாணவரின் கல்வி திட்டமிட்டு பாலடிக்கப்பட்டு வருகின்றது. மிகக்கொடிய ஆசிரியர் பற்றாக்குறை, உயர் வகுப்புகளுக்கும் போதிய பட்டதாரி ஆசிரியரின்மை என கல்வி அழிப்பு மேற்கொள்ளப்படுகிறது. கடந்த ஆண்டின் சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் மலையகத்தின் கல்வி நிலையை அம்பலப் படுத்தியிருக்கின்றது. சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் வடகிழக்கில் இருந்து வந்த அகதி மாணவரேயாவர். இன்னுமொரு எடுத்துக் காட்டு பத்தனை கல்விக் கல்லூரியாகும். இக்கல்லூரியின் தனித்துவத்தை சிதைத்தும் , அதன் முக்கியத்துவத்தை குறைத்தும் இட ஒதுக்கீட்டில் 25% கப்ளீகரம் செய்யப்பட்டு ள்ளமை இதனைக் குறிக்கின்றது. மத்திய மாகாண பாடசாலைகளில் 18 இஸ்லாமிய மாண வனுக்கு ஒரு ஆசிரியர், 23 சிங்கள மாணவரு க்கு ஒரு ஆசிரியர் 49 தமிழ் மாணவருக்கு ஒரு ஆசிரியர்இருப்பது மலையக தமிழ் மாணவரின் கல்விநிலையை காட்டும் இன்னொரு எடுத்துக் காட்டாகும்.

ஆண்டு 5 புலமைப் பரீட்சையில் சித்தியடையும் எந்த தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளு க்கும் அரசாங்கத்தின் உதவி வழங்கப்படு வதில்லை.



பல்கலைக்ழக அனுமதியில் இனவீதாசாரப்படி 540 மலையக மாணவர்கள் ஆண்டு தோறும் அனுமதி பெற வேண்டும் ஆனால் 33000 மாணவர் கல்வி பயிலும் இலங்கை தேசிய பல்கலைக்கயகங்களில் மொத்தம் 200க்கும் குறைவான மலையக மாணவரே இருக்கின்றனர் என்பதும் இது மொத்த மாணவர் தொகையில் கிட்டத்தட்ட 0.5% சதவீதமாகும். மொத்த மலையக மக்களின் குடித்தொகையில் (அண்ண ளவாக 12 இலட்சம்) 0.01% என்பதையும் கொண்டு மலையகத்தின் கல்வி நிலை அறிய முடியும். இவர்களில் 5% மாணவர் மட்டுமே தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளாவர் ஏனையோர் இந்திய வம்சாவளி நகர்ப்புற முதலாளிகள் தோட்ட சேவையாளர்கள் போன்ற நடுத்தர மேட்டு குடிகளின் பிள்ளைகளாவர். களுத்துறை மாவட்ட 19 தமிழ் தோட்டப் பாடசாலையிலும் பதுளை 40 பாடசாலையிலும் சிங்கள அதிபர் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**வீடமைப்பு :-**

தோட்டத் துறை சார்ந்த தொழிலாளர்களுக்கு இரண்டு இலட்சம் நவீன வீடு கட்டப்படுமென தேர்தல் காலத்தில் கூறப்பட்டது. இப்போது 5 பேர்ச்சிஸ் இடமும் 25000/- ரூபா கடனும் வழங்கப்பட வேண்டும் எனவும் 15 ஆண்டுகளில் மொத்தம் கடனும் வட்டியுமாக 58000 மீளளிப்பு செய்யப்பட வேண்டும் எனவும் பிரதி தோட்டத்துறை அமைச்சர் கூறுகின்றார். இது இடதுசாரிகளின் துரோக தனத்தையும், பொதுசஜ முன்னணி அரசாங்கத்தின் ஏமாற்று நிலையையும் அம்பலப்படுத்துகின்றது.

வீடமைப்பு குடியேற்றங்கள் நடத்தி முழுமையாக இலவசமாக இலட்சக்கணக்கா வீடுகள் அமைக்கப்பட்ட நாட்டில் இந் நாட்டுக்காக 200 ஆண்டுகள் உழைத்த ஒரு மக்கள் கூட்டம் நய வஞ்சகமாக ஏமாற்ற ப்படுவது துரோகத்தனமன்றி வேறென்ன? மேலும் இத்திட்டத்தின் பின்னணியில் பெருமளவான தோட்ட காணிகள் கிராம வாசிகளுக்கு பகிரப்படவும், தொழிலாளர்கள் தம் நவீன குடில்களில் ஒதுக்கப்படவுமான கபடத்தனம் இருக்கின்றது. இதற்கோர் உதாரணம் பல்லேகளை - கண்டி சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களுக்கு வீடமை த்துக் கொடுத்து விட்டு தோட்டம் முழுமையாக சூறையாடப்பட்டு விட்டது.

கண்டி மாவட்டம் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க கண்டி மாவட்ட தோட்டங்களை மூடிவிட்டு காணியற்ற கிராம மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கு மாறு பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்திருப்பதாக தெரிகிறது. கடந்த 17 வருட ங்களில் கண்டி மாவட்டத்தின் குண்டசாலை தொகுதியில் இருந்த சகல தோட்டங்களும் மூடப்பட்டு விட்டன. மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, மாவ்ட்டங்களிலும், களுத்தறை மாவ்ட்டத்திலும் தோட்டங்களை பெருமளவில் மூடப்பட்டு விட்டன. மாத்தளை மில்லான மெல்டிக் டிலிசன் கோணஎடிக்க டிவிசன் என்பன சில உதாரணங்களாகும்.

**சாதி சமய சங்கங்கள் :-**

மலையக மக்களின் ஒரு சாராருக்கு வாக்கு நிலை கிடைத்த பின்னர், கொழும்பு மற்றும் மலையக நிகர் சார்ந்த பகுதிகளில் இருந்து சாதிகளின் பெயரில், ஒரு டசினுக்கு மேற்பட்ட சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு தோட்டங்களை நோக்கி படையெடுத்து வருகின்றன.

1. ஆறுநாட்டு வேள்ளாளர் சங்கம்
2. முக்குலத்து சங்கம்
3. அம்லகாரர் சங்கம்.
4. படையாச்சியார் சங்கம்.

என்பன இவற்றுள் சிலவாகும் . முதலாளித்துவ நலன் சார்ந்த படுபிற்போக்கு தனமானவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சங்கங்கள் தேர்தல் காலங்கள் இரகசிய சாதி பிரச்சாரம் செய்வதோ டல்லாமல் சாதியின் பெயரால் அணிதிரளு மாறும் சாதிமாறி வருமாறும், சாதியில் திரு மணம் வைக்குமாறும் கூறி மலையக மக்களை மேலும் பிளவு படுத்தி வருகின்றன.

**சமய பிரச்சார அமைப்புக்கள் :-**

மலையகமெங்கும் மூலை முடுக்கெல்லாம் ஏதாவது சாமியின் பெயரால் ஒரு பிரச்சார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு தோன்றிய வண்ணம் இருக்கிறது. இவர்கள் மக்களின் ஏழ்மை, அறியாமை, மூட நம்பிக்கை தம் மூலதனமாக் கொண்டு மக்களை நவகாலனித்துவ அமைப்பொன்றுக்கும் திரட்டிப் பணியை கச்சிதமாக செய்து வருகின்றன.

இவற்றில் ,

1. சாயி பாபா சமித்திகள்.
2. ஐயப்பன். ஹரேகிருஷ்ணா சங்கங்கள்.
3. எசம்பிளி ஒப் கோட்.
4. சிமார்னா
5. ஏழாம் நாள் திருச்சபை
6. தேவாலய குடும்பம்
7. இஸ்லாமிய மதபிரசாரங்கள்
8. விதம் விதமானபூசாரிகள். பண்டாரங்கள் பில்லிசூனிய காரர்கள்

என்பன அடங்கும்,

இவை மலையக மக்களிடம் விதைக்கப்பட்டு வரும் காலனித்துவ விச விதைகள். இவற்றிடையே புலங்கும் வெளிநாட்டு பணம், இசை நாட்டிய நாடக பாணி அணுகுமுறை, முழுநேர பிரச்சாரங்கள் என்பன வேகமாக சமூக சிதைவுக்குக் அடிப்படையாகின்றன.

### சமூக சேவை அமைப்புக்கள் ;-

மலையக மக்களின் எலும்பும் தோலுமான உடல், நூற்றாண்டு பழமைமிக்க லயன்கள் பெண்களின் மீதான ஒடுக்குமுறை, சீரழிந்த கல்வி மட்டமான சுகாதார நிலை, அறியாமை என்பவற்றை மையமாகக் வைனத்து கோடானு கோடி ரூபாய்களை அந்திய நன்கொடையாளர்களிடம் இருந்து பெறும் இவ் அமைப்புகள் தம்மளவில் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் கூட்டாகவும் பாலியல் சுரண்டல் கோமாளித்தனமான நடவடிக்கை கருத்தரங்கு , விழாக்கள் போட்டிகள் என கூத்தும் கும்மாளமும் அடித்து சிலரின் ஊதிப்பருத்த உடல்களுக்கு தீணியிட்டு வருகின்றன. இவை ஏகாதிபத்திய நல காலணித்துவ அமைப்பை பலப்படுத்தவும் உலகலாவிய ஆக்கிரமிப்பு சுரண்டல் என்பவற்றை நியாயப்படுத்தவும் மூன்றாம் உலக மக்களின் மீது திணிக்கப்ட்டுள்ள துகத்தடிகள். இவற்றில் மலையகத்தை மையமாக கொண்டியங்கும் பெருமபாலானவை. திரு. போல் கெஸ்பாஸ் தலைமையிலான தோட்ட பிரதேசங்களுக்கான கூட்டு செயலகத்தினதும் மோர்ஜ் அமைப்பினதும் அனுசரனையைப் பெற்றுள்ளன.

இவற்றில்

1. சத்தியோதய
2. ஐக்கிய விவசாய சங்கம்
3. பிரிடோ
4. PWA
5. பெருந்தோட்ட தொழிலாளர் ஒத்துழைப்பு
6. நவயுக சமூக அபிவிருத்தி மன்றம்
7. கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு
8. கொட்டகலை சமூக சேவை மன்றம்
9. மலையக இளைஞர் பேரவை
10. சமூக நலன் புரி மன்றம்
11. ஊவா தொழிலாளர் நிலையம், மலையக இலக்கிய பேரவை
12. சேவாலங்கா
13. சர்வோதயம்

என்பன சிலவாகும்.

இவை மலையகத்தின் அவலத்தையும் மலையக மக்கள் சிக்கித் தவிக்கும் சமூக பொருளாதார அரசியல் வலைப்பின்னல்களையும் காட்டும் ஒரு சித்திரமாகும்.

மலையக மக்கள் தொழிலாளர் வகுப்பினர் தம்மை சகல விதமான ஒடுக்கு முறைகளிலும் இருந்து கட்டறுக்க வேண்டுமானால் பரந்து பட்ட மக்களின் போராட்டங்களுக்கு தயாராதல் வேண்டும்., அல்லது சகல சவால்களையும் வென்றெடுக்கக்கூடிய நீண்ட கால போராட்டம் ஒன்றுக்கு மக்கள் தயாராக வேண்டியிருக்கப் பலிபீடத்தில் இருக்கும் மலையக மக்களின் அடிமை விழல்களுக்கு ஒரு புதிய தலைமுறை எழவேண்டும். தலைவர்களும், பிற்போக்கு வாத அமைப்புகளும் மக்ளை ஒடுக்குமுறைகளில் இருந்து விடுவிக்க போராட தயாரா?



ஜே.வி.பி. ஒரு மீளாய்வு - 4

# புரட்சி தோல்வி பெறுமா?

- தோழர் மனுஷநேசன் -

**1971** ஏப்ரல் புரட்சி தோல்வியடைந்தது என பல்வேறு தரப்பினர் கூறுவர். இந்த பதப்பிரயோகம் சரியானது தானா என்னும் சர்ச்சை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. ஒரு தரப்பினர் புரட்சி தோல்வி' என்றும் இன்னொருதரப்பினர் 'இல்லை அது ஒரு தற்காலிகப் பின்னடைவே' எனவே 'பின்வாங்கல்' எனும் பதப்பிரயோகமே பொருத்தமானது என்றும் வாதம் புரிவர். இதில் இரண்டாவது தரப்பினரின் வாதத்தை பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்வதனா



லும் அது தத்துவார்த்தப் பொருத்தமுடையதாகவும் நாங்கள் கொள்ளலாம்.

ஏப்ரல் புரட்சி பலவீனமான திட்டமிடலுடன் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாகவும் புரட்சியை நோக்கி மக்களை அணி திரட்டுவதில் போதிய கவனம் செலுத்தாததன் காரணமாகவும் அமைப்புக்குள் இருந்த தத்துவார்த்த கருத்து முரண்பாடுகளை சடுதியாக அசட்டை செய்ததன் காரணமாகவும் அரசின் பாரிய ஆயுத ஒடுக்குமுறையின் காரணமாகவும் பின்வாங்க வேண்டியேற்பட்டது.

காலி, மாத்தறை மாவட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் சிங்கராஜ வனத்தை நோக்கிப் பின்வாங்கினர். இவர்களில் பெரும்பாலாநோருக்கிடையில் தொடர்புகள் எதுவும் இருக்கவில்லை. ஊருகற, எல்பிட்டிய (இரத்தினபுரி மாவட்டம்) பகுதிகளில் இருந்தவர்கள் பட்டப்பொல எனும் இடத்தில் கூடினர். ஏப்ரல் 23ம் திகதி சனத் தலைமையில் ஒருகுழு பின் வாங்கியது.

இப்பின் வாங்கலின் போது 103 பேர் இணைந்து கொண்டனர். மறுதினமே,இவர்கள் அரச படையினரின் புதிய தாக்குதலுக்கு இலக்கானதால் பெரும் அழிவுக்கு இவர்கள் முகம் கொடுத்தனர். இவர்கள் எந்தளவு கடுமையான தாக்குதலுக்கு முகம் கொடுத்தார்களென்றால், 25ம் திகதியளவில் இவ் 103 பேரில் 43 பேர் மட்டுமே மிஞ்சியிருந்தனர். எஞ்சியோர் சிங்கராஜ வனத்திற்குள்ளேயே நாட்களை கழித்துக் கொண்டிருந்த போதும் மே மாத அளவில் ஏறத்தாழ இவர்களில் எல்லோரும் கைது செய்யப்பட்டனர். தாக்குதலின் போது பிரதான குழுவிலிருந்து வழிதவறிய சனத்தை கிராமவாசிகள் பொலிசாரிடம் பிடித்துக் கொடுத்ததோடு அவர் அரச படையினரால் கொல்லப்பட்டார்.

மாத்தறை மாவட்டத்திலேயே தெனியாய பகுதியில் போர் மும்முரமாக நடந்த பிரதேசம் எனலாம். ஏப்ரல் 23ம் திகதி அரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையின் பாரிய தாக்குதலுக்குள்ளானதோடு அவர்கள் சிங்கராஜ வனத்தை நோக்கிப் பின்வாங்கினார் என்றும் யூன் 30ம் திகதியளவில் இவர்களனைவரும் முற்றாக கைது செய்யப்பட்டனர். அனுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஒத்தப்புவ, வில்பத்து, நொரவப்பத்தனை நிக்கட்டி போன்ற காட்டுப் பிரதேசங்களுக்கு பின்வாங்கினர். இதேவேளை பதுளை, மொனராகலை, கண்டி மாத்தளை போன்ற மாவட்டங்களில் ஈடுப்பட்டவர்களும் பின்வாங்க முயற்சித்த போதும் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டனர். பலரால் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்க முடியாமல் இருந்தது.

இவ்வாறான பின்வாங்கல்களில் நீண்ட காலம் தாக்குப் பிடித்தது கேகாலை மாவட்டத்திலிருந்து வில்பத்து வனத்தை நோக்கிய பின்வாங்கலே, இம்மாவட்டத்தில் கலிகமுவ எனும் பிரதேசத்தில் பலப்பத்தாவ கிராமத்திலிருந்து பின்வாங்கிய இரண்டு குழுவில் 200க்கும் மேற்பட்டடோர் இணைந்து கொண்டனர். இவர்கள் இரு குழுக்களாக தனித் தனியே வெவ்வேறு பாதைகளினூடாக வில்பத்து வனத்தை நோக்கிப் பின்வாங்கினர். இதில் நூறுக்கும் மேற்பட்டோர் காணப்பட்ட ஒரு குழு பின்வாங்கும் போது அரச படையினரின் தாக்குதலுக்கு தொடர்ச்சியாக இலக்கானதில் வில்பத்தவையை அடையும் போது 18 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர். இப்படி எஞ்சியோர் அனுராதபுர மாவட்டத்திலிருந்து பின்வாங்கிய குழுவோடு இணைந்து கொண்ட போதிலும் வில்பத்து வனத்தில் தொடர்ந்தும் இருப்பது கடினமானதாகவே இருந்ததால் நந்தன மாரசிங்கவால் இக்குழு கலைக்கப்பட்டது. பல்லத்தாவலில் இருந்து புறப்பட்ட நூற்றுக்கு மேற்பட்டோரைக் கொண்ட மற்றக் குழுவினர் மடகஹப்பொல மலையை வந்தடைந்ததோடு குருநாகலை மாவட்டத்திலிருந்து பின்வாங்கி இருந்தவர்களுடன் இணைந்து குருநாகல் மாவட்டத்தின் பல்லேகலைக்குச் சென்றனர். இவர்களின் தொகை பெரிதாக இருந்தமையினால் பல்லேகலையில் ஓரிருவாரங்களை மட்டுமே கழித்து விட்டு வில்பத்துவையை நோக்கிப் பின்வாங்கினர். இக்குழுவிலும் இறுதியில் 18 பேர் மட்டுமே எஞ்சினர். இவர்கள் அனுராதபுர மாவட்டத்திலிருந்து பின்வாங்கிய பகுதியினருடன் இணைந்து வில்பத்து, ஆணைமடு, வஸ்கமுவ, ஹொரவப்பத்தனை, கந்தளாய் ஆகிய இடங்களின் காடுகளில் முகாமிட்டு பலவித இன்னல்கள் மத்தியில் இரண்டு அல்லது மூன்று வருடகாலமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இக்கால கட்டத்தில் தொடர்ச்சியாக 'சேகுவேரா' காரர்கள் எனும் பெயரில் தொடர்ந்தும் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டிருந்தனர். 1976ஆம் ஆண்டளவில் இவர்கள் அனைவரும் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

## சிறைக்குள் இருந்து மீண்டும் புத்துயிர்.

புரட்சி முற்றிலும் பின்வாங்கிய பின் 20,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கூடங்களிலும் தடுப்பு முகாம்களிலும் வன முகாம்களிலும் இட்டு சித்திரவதைக்குள்ளாயினர். ஏறத்தாழ 150-200 வரையானோர் மட்டுமே தப்பித்துக் கொண்டனர். இவர்கள் காடுகளிலும் வேறும் பல இடங்களிலும் சிதறி அங்குமிங்குமாக மறைந்திருந்தனர். சிறு பகுதியினர் நகர்ப்புறங்களில் ஒளிந்து இருந்தனர். இவர்கள் சிறையிலிருந்தவர்களுடன் மறைந்திருந்த ஏனையோருடனுமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் அமைப்பின் அரசியல் நடவடிக்கைகளை ஓரளவுக்காவது மீண்டும் உயிர்ப்பிக்க முயன்றனர். எவ்வாறாயினும் இவர்களில் சிறு பகுதியினர் மாத்திரம் ஜே.வி.பி.யின் அரசியலைப் பற்றி விமர்சன ரீதியாக நோக்க முன்வந்தனர். பெரும்பாலானோர் ஜே.வி.பி யை விமர்சிக்க முன்வரவில்லை. சிறைக்கூடங்களில் ''விமர்சன ரீதியில் நோக்க வேண்டும், இல்லை அந்தளவு மோசம் போய்விடவில்லை'' எனும் இரு வேறுபட்ட கருத்துடையவர்களும் காணப்பட்டனர். இவ்விரு தரப்பிருக்கும் இடையில் வாதவிவாதங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

குறிப்பாக சிறைக்கூடங்களில் மூன்று விதமான அரசியல் போக்குடைய ஜே.வி.பியினர் காணப்பட்டனர்.

முதலாவது ஜே.வி.பியின் அரசியல் பூரணமாக தவறற்றது எனும் போக்குடையது. இக்கருத்தே பெரும்பாலானவர்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்டக் கருத்தாக இருந்தது.

இரண்டாவது : ஜே.வி.பியின் அரசியலும்



செயல்முறைகளும் தவறானவை எனவே தவறற்ற அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்புதல் அவசியம் எனும் கருத்து. இக்கருத்தை சிறு குழுவினர் மட்டுமே ஏற்றுக் கொண்ட போதும் இவர்கள் அணிதிரண்டு ஸ்தாபனப்படக் கூடியளவு தயாரானவர்களாகவும் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இரு பிரிவினரும் முக்கிய பிரிவினராக காணப்பட்டனர். 1971 புரட்சிக்குப் பின் இன்று வரை இந்த கருத்தை முதன்மையாக்கி முரண்பட்டுக் கொண்டு வந்திருக்கின்றனர்.

மூன்றாவது குழு முற்றாகவே அரசியலை நிராகரித்தது. இவர்கள் இதற்கு தத்துவ நியாயம் கற்பிப்பவர்களாகவே பெரும்பாலும் இருக்கவில்லை. ஒருவித விரக்தி கலந்தவர்களாகவும் இது சாத்தியமில்லை என்றும் கருதினர்.

இதற்கிடையில் சிறைக்கூடங்களிலும் தடுப்பு முகாம்களிலும் இருந்தவர்களில் ''கடந்த கால செயல் முறை தவறானவை தவறற்ற அரசியல் செயல்முறைகள் உருவாக வேண்டும் எனும் கருத்துடையவர்கள் சிறைக்குள்ளேயிருந்து அதற்காக உழைத்தனர். மாக்ஸிய நூல்களை தொடர்ந்து கற்றல், சிறைக்குள்ளிலிருந்து வெளியுலக நட்பு சக்திகளுடனான தொடர்புகளை மேற்கொள்ளல், சிறைக்குள் கலந்துரையாடல்கள் விவாதங்கள் என்பவற்றை நடத்துதல் என்பவற்றில் ஈடுபட்டனர். கடந்தகால தவறுகளை கடுமையாக விமர்சனத்துக்குள்ளாக்கியவர்களை நோக்கி மற்ற கோஷ்டி அப்படி விமர்சிப்பவர்கள் அனைவரும் துரோகிகள், சந்தர்ப்பவாதிகள் கைக்கூலிகள் என்று கூட அலட்சியம் செய்தனர். சிறைக்குள் இவ்விரு பிரிவினருக்கிடையில் மோதல்கள் ஏற்பட்டன. இந்த கருத்து முரண்பாடுகளை மையமாகக் கொண்டு சிறைக்குள்ளிருந்து விஜேவீர ''பிரஷ்ண விசி எக்கட பிளித்துரு'' (21 கேள்விகளுக்குப் பதில் ) எனும் தலைப்பில் 1972 இல் கட்டுரை ஒன்று எழுதியிருந்தார்.

''கருத்து ரீதியிலான போராட்டங்களை கைகால்களால் நடாத்தும்படி நாம் தூண்டவில்லை. முதலாளித்துவ கருத்தியலை தமது தோள்மீது சுமந்துள்ள எல்லா அரசியல் குழுக்களையும், கும்பலையும் நாம் தோற்கடிக்கப்பட முடியாது பிரகாசமான சிந்தனைகள் மூலமாக கருத்தமைவு ரீதியாக தோற்கடிக்கவும் மறுப்புரைக்கவும் கூடிய ஆற்றல் எமது பக்கம் உண்டு.

இந்நிலைமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாத எமது அரசியல் எதிரிகள் எமக்கு எதிராக தினமும் எண்ணிக்கையிலடங்காத பொய், புரட்டு, தூற்றல்களில் ஈடுபட்டனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பல தரப்பட்ட பொய், புரட்டல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட கழுத்தறுப்பு, சீர்குலைவு சதி, துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களில் வர்க்க உணர்வுடன் கட்சி மீது கொண்ட அத்துரோகிகளுக்கு கை கால்களால் உபசாரம் வழங்கியது சர்வதேச அனுபவங்களுக்கு ஏற்பவே ஆகும்'' என்று கூறியது அந்தப் பதில்.

இதற்கிடையில் பல சிறைக்கூடங்களிலும் தடுப்பு முகாம்களிலும் ஜே.வி.பியினர் தமது வகுப்புக்கள் ஐந்தைஎவ்வித மாற்றமோ, திருத்தமோ இன்றி நடத்தினர். மாக்ஸிய நூல்கள் சஞ்சிகைகள் என்பவற்றிலிருந்து மேற்கோள் காட்டுவதன் மூலம் தமது அரசியல் தவறற்றது என்பதை நிரூபிக்கும் பெரும் முயற்சியில் ஈடுபட்டனர்,. சிறைக்கூடங்களிலும் முகாம்களிலும் தமது ஸ்தாபன இயந்திரத்தை மீண்டும் கட்டியெழுப்பி அதனுள் பிரதான ஒட்டமாக தொடர்ந்தும் செயல்பட ஜே.வி.பியினரால் முடிந்தது.

தொடரும்

குறிப்பு :-

''ஜே.வி.பி. ஒரு மீளாய்வு'' கட்டுரைக்கு 71 புரட்சியின் போது பின்வாங்கல் தொடர்பான ஆங்காங்கு சிதறிக் கிடந்த பல தகவல்களை ஒன்று குவித்து தொகுத்தது . ''ஜே.வி.பி , பிராஹய, விசாஷய நாதேஷபாலனய'' எனும் நூலே. இந்நூலை 71 புரட்சியில் ஈடுபட்டிருந்த வசந்த திசாநாயக்க, வெட்றிக் பெர்னான்டோ, சரத் டி சில்வா, ரஞ்சித் குமார ஆகியோரால் எழுதப்பட்டிருந்தது.

இந்நூலில் பல பலவீனமான தகவல்களும் கருத்து நிலையும் காணப்படுகின்ற போதும் 71 புரட்சியின் போது நடந்த பல சம்பவங்களை எவரும் மறுதலிக்குமளவிற்கு இருக்கவில்லை. எனவே அக்கட்டுரையே இம்முறை ஆதாரமாக கையாளப்பட்டது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோஷலிசம் இதற்கு முன்பும், இதற்குப் பின்பும்

உலக அதிகாரச் சமநிலை புதிய உலக ஒழுங்கில் முழுமையாக முதலாளித்துவ நாடுகளின் கட்டுப்பாட்டுகள் கொண்டுவரப்பட்டுள்ளது. சோஷலிச நாடுகளது பின்னடைவுக்கு பிறகு முதலாளித்துவம் மிகவும் வெற்றிகரமாக அல்லது மகிழ்ச்சியாக செயற்படும் நிலையில் காணப்படுகிறது. சோஷலிசம் தோல்விகண்டு விட்டது.



சோஷலிசத்தால் மனிதத் தேவைகளை நிறைவேற்ற முடியாது என்று நியாயித்துக் கொண்டிருந்த பிற்போக்கு மதவாதிகளுக்கும் மகிழ்ச்சிகரமான செய்தியாகவே சோஷலிசப் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

கடந்த எழுபது வருடங்களுக்கு மேலாக சோஷலிசம் உலக ஒழுங்கில் பெரும்பங்கினை வகித்து வந்தது. சமூக அநீதிகளுக்கு எதிராக, தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு சார்பாக, சமூக சமத்துவத்தின் சார்பாக மானுட சமத்துவத்திற்காக சோஷலிசம் மிகச் சரியான முறையில் செயல்பட்டு வந்துள்ளது. இவற்றுள் முழுமையாக பாதிப்படைந்த முதலாளித்துவ நாடுகள் (அமெரிக்கா, ஐக்கியசாம்ராஜ்யம், பிரான்சு, இத்தாலி உட்பட பாகிஸ்தான், இலங்கை, ஈரான், இந்தியா) சோஷலிசத்துக்கு எதிராக ஈடுபட்டு செயல்பாடுகளை முன்னெடுத்தன. சோஷலிசம் தொடர்பாக வேறான, ஆதாரமற்ற பிரச்சாரங்களை அரசியல்சார்பில் முன்னெடுத்ததுடன் சோஷலிச நாடுகளுக்கு எதிராக இராணுவ அச்சுறுத்தலையும் கொடுத்தன. உலக முதலாளித்துவம் தமது மோசமான சுரண்டல் கொள்கையினை உலகமெங்கும் ஸ்தூலமாக்குவதற்காக நிறைவான தொழிற்பாடுகளை முன்னெடுத்தன. முதலாளித்துவமே பிரச்சினைகளுக்கு தீர்வான மாபெரும் மருந்து என்பதனை முதலாளித்துவ சிந்தனையாளர்கள், ஆன்மிகவாதிகள் ஆதரவுடன் முதன்மைப்படுத்தினர். கம்யூனிஸத்தின் கொள்கைகள் ஆன்மிக இருப்புக்கு எதிரானது என்ற விஞ்ஞானபூர்வமற்ற பொய்ப் பிரச்சாரத்தை சகல ஆன்மிக பீடங்களும் வெளிப்படையாக பிரச்சாரம் செய்தன. கம்யூனிஸம் சோஷலிசம் என்ற வார்த்தைகளின் அடிப்படைத் தத்துவங்களைக்கூட முழுமையாக அறியாத எழுத்தாளர்கள், சிந்தனைவாதிகளே. சோஷலிசம் தொடர்பாக தீர்வுகளை நியாயப்படுத்தினர்.

சோஷலிசம் முழுமையாக எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை முன்னெடுக்கும் மந்திரமான மருந்து அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.



ஏனென்றால் **எல்லாக் காலத்துக்கும் ஒரு தீர்வினை அல்லது எல்லாக் காலத்துக்கும் பொதுவான திட்டவட்டமான மாறாத தீர்வினை எச்சக்திகளாலும் முன்வைக்க முடியாது. எல்லாக் காலத்துக்கும் பொதுவான தீர்வு உண்டு என்போர் உலகவரலாற்றை சரியாக விளங்காத குருடர்களாகவே காணப்படுவர் என்றே நான் அபிப்பிராயப்படுகிறேன்.**

சோஷலிச உலகம் உண்மையிலேயே நிகழ்கால உலக ஒழுங்கில் பின்னடைந்துள்ளது. இதனை மறுப்பின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். முதலாளித்துவம் உலகப்பரப்பில் 400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பரிட்சிக்கப்பட்டு வருகிறது. முதலாளித்துவக்கு முன்பு சோஷலிசம் ஒரு சிறு குழந்தையே. எழுந்து நடக்க முன்வந்த போதே முதலாளித்துவ சக்திகளும், அதன் ஆதரவு தளங்களும் மூர்க்கத்தனமான முறையில் செயல்பட்டன. சோஷலிசத்துக்கு எதிராக நன்கு திட்டமிட்டு செய்யப்பட்டன. ஆதலால் சோஷலிச உலகம் இயல்பான முறையில் பலவீனமாகியுள்ளது.

சோஷலிசத்துக்கு எதிராக முன்வைக்கும் கருத்துக்கள் சலனத்துக்கு உரியவை ஆகும். சோஷலிசம் சாத்தியமற்றது, சோஷலிசத்தில் சனநாயகம் இல்லை, சோஷலிசத்தில் மத உரிமை இல்லை என்பன சோஷலிசத்துக்கு எதிராக முன்வைக்கப்படும் முதன்மைக் கருத்துக்களாகும். சோஷலிசத்தின் நெருக்கடிகளுக்கு சோஷலிச எதிராளிகளால் கூறப்படும் சிந்தாந்த வழி நியாயம் இதுவாகும். ஆயின் மேற்படி காரணங்கள் விஞ்ஞானபூர்வமற்றவை. முதலாளித்துவம் அடிப்படையிலேயே அநீதியான பொருள் உற்பத்தியை, பங்கீட்டைக் கொண்டுள்ளது. இதன் அடிப்படைத் தளமே சுரண்டல் ஆகும். ஒரு சிலர் செல்வச் சூழலுக்குள் சந்தோஷமாக வாழும் சமகாலத்துள் பெரும்பாலான மக்கள் வறுமையில் வசதிகள் இழந்த சூழலில் வாழ்கின்றனர். இதன் காரணமாக விபச்சாரம், திருட்டு, சமூக அத்துமீறல்கள் மிகத் தாராளமாக ஆன்மிகக் கட்டுக்களை எல்லாம் தகர்த்து நடைபெறுகின்றன. ஒழுக்கம், அன்பு, பாசம் என்ற பாரம்பரிய கருத்துக்கள் உடைக்கப்படுகின்றன. இன்னொரு பக்கமாக ''நவீனம்'' என்ற போர்வையில் தார்மீக விழுமியங்கள் சீரழிக்கப்படுகின்றன. மனிதன் ஒழுக்கத்திலிருந்து அந்நியமாக்கப்படுகிறான். இவ்வாறான விளைவுகளின் நிலத் தயாகம் முதலாளித்துவம் என்பதினை நேர்மையாக சிந்திப்பவர்கள் ஏற்கவே செய்வர். ஆதலால் முதலாளித்துவ சிந்தனைவாதிகளும், ஆன்மீக சிந்தனைவாதிகளும் முன்வைக்கும் காரணங்களால் சோஷலிச உலகம் நெருக்குதலுக்கு உள்ளாகவில்லை. சோஷலிச நெருக்கடிக்கான காரணங்கள் புறம்பானவை.

இன்றைய உலக ஒழுங்கில் சோஷலிசம் பின்வாங்கி உள்ளது. எல்லாமக்களது நலன்களுக்குமாக உருவாக்கப்பட்ட சோஷலிசக் கொள்கையினை கஷ்டப்படும் மக்களே சந்தேகத்துடன் நோக்குகின்றனர். சோஷலிசம் தொடர்பான அடிப்படைச் சந்தேகங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. மாபெரும் சிந்தனையாளர்களான மார்க்ஸ், லெனின் சிலைகளையே உடைக்கும் அளவுக்கு நிலைமைகள் கவலைக்குள்ளாகியுள்ளன. இவ்வாறான நிகழ்வுகள் சோஷலிசத்துக்கு உடனடியாக ஏன் ஏற்பட்டது என்பது முக்கியமான வினாவாகும்.

சோஷலிசம் மாற்றங்களை விரும்பும், அங்கீகரிக்கும் இயல்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது. மார்க்ஸ், ஒரு கடவுள் அல்ல. மார்க்சிசம் ஒரு வேதநூல் அல்ல. மாற்றப்படக்கூடாது என்றெல்லாம் நாம் சிந்திப்பது மாக்சிசத்துக்கு அடிப்படை விரோதமாகும். சோஷலிசத்தை கட்டும்பணிகளில் மிக முக்கிய தவறுகள் நிகழ்ந்துள்ளன.

(அ) கட்சி சர்வாதிகாரம்

(ஆ) மாற்றுக் கருத்துக்களை மறுத்தல்

(இ) உலகப்பொருளாதாரத்தில் இருந்து அந்நியமாதல்

(ஈ) தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக தெளிவின்மை

(உ) அரசியலில் சமத்துவமின்மை

சோஷலிசத்தின் இன்றைய நெருக்கடிகளுக்கு இக்காரணிகள் முக்கியமான பங்களிப்புகளைச் செய்துள்ளன. கட்சி சர்வாதிகாரம் சோஷலிச நாடுகளில் கறாரான முறையில் நடைபெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்துள்ளன. கட்சி என்பது ஆலயங்கள் போன்று தோற்றமளித்துள்ளன. கட்சியின் முடிவுகள் இந்நாடுகளின் சகல தளங்களிலும் சாத்தியமாக்கப்படுகின்றன. சோஷலிச நாடுகளில் கட்சி என்பது ஒரு குறிப்பிட்ட வட்டத்தின் முடிவுகளால் வழிநடாத்தப்பட்டுள்ளது. அடிப்படையிலேயே இக்குழுவினர் தொழிலாளர் வர்க்க அபிலாசைகளை முன்னெடுக்காததும், குறித்துக் காட்டப்பட வேண்டிய விவகாரமாகும். சோவியத் ருஷ்யாவில் தோழர் ஸ்டெலின் காலத்திலும் அவரது மறைவுக்கு பின்னும் இவ்வாறான குழுக்கள் அரசியல் முடிவுகளில் பெரும்பங்குகளை வகித்துள்ளனர்.



சோஷலிசம் தொடர்பாக அல்லது சமூக நீதி தொடர்பாக இக்குழுவினர் பெருமளவில் அக்கறையற்று இருந்துள்ளனர். சோஷலிசத்தின் பெயரில் சமூக அநீதிகளை இக்குழுவினர் முன்னெடுத்துள்ளனர். தோழர் லெனின் கட்சி தொடர்பாக இறுக்கமான கருத்தை கொண்டிருந்தார். தோழர் லெனின் தனது சூழலுக்கு ஏற்ப இவ்வாறு கட்டுப்பாடுகளை பேணி இருக்கலாம் ஆயின் எல்லாக் காலத்துக்கும் இவ்வாறான கட்சி பண்பு காணப்படுவது பொருத்தமில்லை. கட்டுப்பாடுகளை முன்னெடுத்து இன்னொரு வகையில் சோஷலிசத்தை முன்னெடுத்ததில் சாத்தியமாகியிருக்கலாம். ஆயின் நிலைமைகள் இவ்வாறு நடைபெறவில்லை. முதலாளித்துவ நாடுகளில் இயங்கும் கட்சிகளின் சனநாயகப் பண்பினைக் கூட சோஷலிச நாடுகளது கட்சிகள் மறுத்து செயல்பட்டதனை நாம் ஒப்புக் கொள்ளவே வேண்டும்.

சோஷலிச நாடுகளில் மாற்றுக்கருத்துக்களை எதிர்த்த நிலை புரட்சிக்கு பிந்திய காலகட்டங்களில் காணப்பட்டது; சோஷலிசம் தொடர்பாக கட்சியின் மத்தியகுழுவினர் கொண்டிருந்த கருத்துகளுக்கு பதிலான கருத்தை முன்வைப்பது பூர்ஷ்வா கருத்து என்றும் முதலாளித்துவ சார்பு கருத்து என்றும் எதிர்ப்புரட்சி கருத்து என்றும் மூர்க்கத்தனமாக நிராகரிக்கப்பட்டுள்ளன. அல்லது இவ்வாறான மாற்றுக் கருத்தாளர்கள் சோஷலிச பாதுகாப்பின் கீழ் கொலை செய்யப்பட்டுள்ளனர். **தோழர் ரோசா லக்சம்பர்க் தோழர் லெனின் செயற்பாடுகள் தொடர்பாக மாற்றுக் கருத்தை முன்வைத்த போது கூட அக்கருத்துக்கள் திரிபுவாதம் என்பதன் கீழ் கட்சியால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சகலமாற்றுக் கருத்துக்களும் கூர்மையான முறையில் நிராகரிக்கப்பட்டுள்ளன.** இவ்வாறான நிலைமைகள் எதிர்முரண் விளைவுகளையே புரட்சிக்கு பிந்திய காலகட்டங்களில் ஏற்படுத்தியுள்ளது என்பதனையே இன்றைய உலக ஒழுங்கு நிரூபித்து வருகிறது. மாற்றுக் கருத்துக்களை பிரதிபலிக்கும் ஜனநாயகப் பண்பு சோஷலிசத்துக்குரியது. சோஷலிசத்தின் பெயரால் நடைபெற்ற மாற்றுக் கருத்து மறுப்பு புரட்சிக்கு பிந்திய சமூகங்களை தலைகீழாக்கியது நல்லதொரு பாடமாகும்.

சோஷலிசப் பொருளாதாரம் ஒன்றே கஷ்டப்படும் மக்களது வாழ்வுக்கு ஏற்றதொரு தீர்வு என்பது முடிந்த முடிவாகும். ஆயின் சோஷலிச நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகள் அதன் நவீன தளத்தினை மறுத்தே இயங்கியுள்ளது. **ஒரு மூடப்பட்ட பொருளாதாரம் சோஷலிசத்தின் பெயரில் பதிலீடு செய்யப்பட்டுள்ளது. சந்தை உறவுகள் முழுமையாகத் தண்டிக்கப்பட்டிருந்தன.** இதில் இருந்து சீனா ஓரளவு தப்பி உள்ளது போல் விளங்குகிறது. ஆயின் இன்று எஞ்சியுள்ள கியூபா, வட கொரியா போன்ற சோஷலிச நாடுகள் இவற்றில் இருந்து இன்னும் பாடங்களை கற்கவில்லை போல் செயற்படுகிறது. சந்தை உறவினை பயன்படுத்துவது முதலாளித்துவத்துக்கு திரும்பிச் செல்வதாக அமைவதாகாது. சந்தை உறவுக்கும் சந்தையினை அடிப்படையாக்கிய பொருளாதாரத்துக்கு நிறைய வேறுபாடுகள் உள்ளதனை நாம் கவனிக்க வேண்டும்.



சோஷலிசப் பொருளாதாரத்தை ஒழுங்காக அமுல் நடாத்தியிருந்தால் வறுமை ஏற்றத்தாழ்வு புரட்சிக்கு பிந்திய சமூகங்களில் அந்நியமாகியிருக்கும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

தேசிய இனப்பிரச்சினை நிலை சார்பில் சோஷலிச நாடுகள் விஞ்ஞான பூர்வமற்ற நிலைப்பாடுகளையே கொண்டிருந்தன. சோஷலிசம் ஏற்பட்டால் தேசிய இனப்பிரச்சினைத் தீர்ந்துவிடும் என்று புராணம் பாடியவர்கள் புரட்சிக்கு பிந்திய காலகட்டத்தின் தேசிய இன எழுச்சிகளை எவ்வாறு அடையாளம் காண்பார்கள்? சோஷலிச நாடுகள் புரட்சிக்கு பிந்திய காலத்தில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக சரியான தீர்வினை முன்வைக்கவில்லை. தேசிய இன எழுச்சி என்பது அடிப்படையிலேயே முதலாளித்துவ எழுச்சி என்றே வர்ணிக்கப்பட்டது. இவ்வாறான வரலாற்றுத் தவறுகளின் அரசியல் வியாபாரம், இன்றைய நிலைமைக்கு எம்மை அனுமதித்துள்ளது துரதிஷ்டமானது ஆகும்.

அரசியல் சமத்துவத்தின் இன்னொரு வெளிப்பாடு சோஷலிச சமூகமாகும். ஆயின் புரட்சிக்கு பிந்திய சமூகங்களில் அரசியல் சமத்துவம் குறைவான அளவில் சாத்தியமாகி உள்ளது என்பது வேடிக்கையாகவுள்ளது. முழு சமத்துவத்தின் ஒரு பகுதி அரசியல் சமத்துவமாகும். அரசியல் சமத்துவத்தை மறுத்துவிட்டு பொருளாதார சமத்துவத்தை முன்னெடுப்பது எதிர்முரண் விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதினையே நிகழ்வுகள் கட்டியம் கூறுகின்றன. ஆதலால் அரசியல் பங்கு பற்றுதலைக் கொண்டு அரசியல் சமத்துவத்தை உறுதிப்படுத்துவது முக்கியமான இலக்காக வேண்டும்.

சோஷலிசத்தினை அமுல் நடாத்துகையில் ஏற்பட்ட இத்தவறுகளே புரட்சிக்கு பிந்திய சமூகத்தை முழுமையாகப் பாதித்துள்ளது. ஆதலால் இத்தவறுகளினை நாம் சுயவிமர்சனத்துடன் மனம் திறந்து அங்கீகரிப்பது அடிப்படைத் தேவையாகும். இன்றைய உலகம் முழுமையாக வித்தியாசமான பரிமாணத்தை கொண்டுள்ளது. மாபெரும் சிந்தனையாளர் மார்க்ஸ் வாழ்ந்த சூழலுக்கும் இன்றைய சூழலுக்கும் நிறைய வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன. மார்க்ஸ் விபரித்த தொழிலாளருக்கும் நிகழ்கால தொழிலாளருக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. மார்க்ஸ் விபரித்த முதலாளித்துவம் முழுமையாக மிருகத்தன்மை உடையது. ஆயின் நிகழ்கால முதலாளித்துவம் சுரண்டலுக்கு எதிரான எழுச்சியைத் தடுப்பதற்காக சலுகைகளை வழங்கும் மனித முகத்தை அணிந்துள்ளது. ஆயின் பாரம்பரிய மார்க்சிச விதிகள் மூலம் மட்டும் நிகழ்கால முதலாளித்துவ எதிர்ப்பு போராட்டங்கள் சாத்தியமாக வேண்டும் என்பது கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டும். **சோஷலிசம் வெற்றிக்கான சகல உள்ளார்ந்த பலத்தை இன்றும் கொண்டுள்ளது. சோஷலிசத்தை கட்டியெழுப்புதலில் ஏற்பட்ட மகாபிழைகளுக்கு சோஷலிசத்தை காரணம் கூறுவது புத்தி பூர்வமானது அல்ல.** சோஷலிச சமூக விதி நீதியானது; உலகத்தின் முன்னேற்றங்களுக்கு ஆதாரத்தளமானது. முதலாளித்துவம் சுரண்டலை கொண்டது. அது அதன் உள்ளார்ந்த பலவீனத்தின் காரணமாக தனக்கு எதிரான சவக்குழிகளைத் தோண்டியே தீரும். சோஷலிசம் தோல்வி அடைவது என்பது முதலாளித்துவம் இல்லாத இருப்பில் மட்டுமே சாத்தியமாகும். அடிப்படைவாதம் முதலாளித்துவத்துக்கு மாற்றீடாகாது. மார்க்சிசம் மதம் அல்ல. நாம் தவறுகளை பகிரங்கமாக விமர்சிக்கும் பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். திறந்த விமர்சனங்கள் மார்க்சிசத்தை மேலும் விசாலப்படுத்தும். சுரண்டல் சமூக அமைப்பு செயல்படும் போது சுரண்டலற்ற அமைப்பு என்றும் சாத்தியமே. அது தோல்வி அடையாது. பின்னடைவு என்பது தோல்வியும் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் என் எழுத்தும்

## - தஸ்லிமா நஸ்ரின் -

தொகுப்பு: பாமியா பாருக்

''நான் எனது நாட்டிலுள்ள மதவடிப்படை வாதிகளையும், இந்தியாவிலுள்ள பாரத ஜனதா கட்சியினரையும் வெறுக்கிறேன். ஆனால்.... நான் எனது நாட்டை வெறுக்கிறேன் என நீங்கள் ஒரு கணமேனும் நினைத்து விடாதீர்கள் . நான் எனது நாட்டை வெறுக்கவில்லை. நான் அதை நேசிக்கிறேன். நான் எனது நாட்டை விட்டு ஒருபோதும் வெளியேற மாட்டேன். ஆதலால் இது நான் அதன் தவறுகளை மூடிமறைப்பேன் என அர்த்தப்படாது. இத்தவறுகளினாலேயே நான் எழுதுகிறேன்.

நான் எழுதுபவை முல்லாக்களினால் ஏற்றுக் கொள்ளக்கூடியவையோ கவரப்படக் கூடியவையோ அல்ல என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர்களைத் திருப்திப் படுத்துவதற்காக நான் எழுதுவதுமில்லை. இனியும் எழுதவும் மாட்டேன். நான் மாற்றத்திற்காகவே எழுதுகிறேன். நான் எழுத்தினூடாக அவர்கள் பெண்ணையும் ஆணையும் பிரிக்கும் எல்லைக் கோட்டைக் கடந்து அவர்களின் சுதந்திரத்தைப் பெறமுடியுமென்பதற்காகவே நான் எழுதுகிறேன். நான் முல்லாக்களுக்கு அஞ்சவில்லை, மாறாக அவர்கள் தான் என்னைப் பார்த்து அஞ்சுகிறார்கள். அவர்கள் எனது பேனாவின் வலிமையைப் புரிந்திருக்கின்றார்கள்.

சமூகத்தின் பால், மதம், பணம் என்ற அடிப்படையில் பலவீனமான அனைத்துப் பிரிவினருக்குமானதே எனது போராட்டம். இவர்களினது சமவுரிமைகளைப் பெறுவதில் நான் வெற்றி கொள்வேன் என நம்புகிறேன். அதற்கு முன்பாக அவர்கள் என்னைக் கொலைசெய்ய நேரிட்டால்... இன்னும் பல தஸ்லீமாக்கள் எனது போராட்டத்தைத் தொடரவிருப்பார்கள் என்பதில் நான் நிச்சயமாகவுள்ளேன். அந்நம்பிக்கையே என்னை இயங்க வைக்கின்றது.... நான் மிம்னசிங்கில் குடும்பக் கட்டுப்பாட்டு அதிகாரியாக பணிபுரிந்தேன். இங்குதான் நான் தமது கணவன் மாரினால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட பல கிராமத்துப் பெண்களைக் கண்டேன். அவர்களில் பலருக்கு ஆறு அல்லது எட்டு குழந்தைகள் இருந்தனர். இதுவென்னை கோபத்துக்குள்ளாக்கியது. ''நீங்கள் குழந்தைகளைப் பெறுவதில் மாத்திரம்தான் அக்கறையாகவிருக்கிறீர்களா?'' என நான் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். அதற்கு அவர்கள், தாமில்லை, தமது கணவன்மாரே குழந்தைகளைப் பெறும்படி கட்டாயப்படுத்துகின்றார்கள் என்ற பதிலை எனக்குத் தந்தனர். அவர்களை எந்தவிதகருத்தடை மாத்திரைகளைப் பாவிப்பதற்கும் அவர்களது கணவன்மார் அனுமதிக்கவில்லை. நான் கருத்தடைச் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளையில் தான், நாம் வாழும் நாட்டில். எமது சமூகததின் இன்னொரு பரிமாணமான வறுமை என்னை மிகவும் பாதித்து. மக்கள் மிகவும் வறுமைப்பட்வர்களாகவிருந்தமையினால் அவர்கள் எதையும் செய்ய தயாராகவிருந்தார்கள்.

என்னிடம் இச்சத்திரசிகிச்சைற்காக வரும் அனைத்துப் பெண்களும் , 16, 17 வயதுப் பெண்கள் உட்பட, கருத்தடை சத்திரசிகிச்சை செய்பவர்களுக்கு அரசாங்கள் வழங்கும் 175 தக்காக்ளையும், ஒரு சேலையையும் பெறுவதற்காகவே வருகிறார்கள். சில நேரங்களில் தமக்கு குழந்தைகள் இருக்கின்றார்கள் என கூறும் பெண்கள் , திருமணமான பெண்கள், திருமணமாகாத பெண்கள், விவாகரத்துச் செய்து கொண்ட பெண்கள் இவையனைவருமே பணததிற்காகவே வருகின்றார்கள்.

நான் பங்களாதேஷைச் சுற்றி வலம் வருகையில், இன்றும் குறைந்தளவிலான பெண்களே வீட்டிற்கு வெளியில் சென்று தொழில் புரிகிறார்கள் என்பதைக் காணக்கூடியதாகவிருந்தது. வீட்டிற்கு வெளியில் சென்று தொழில் செய்வதற்கு அவர்களது கணவர்மார் தடை விதித்திருப்பதால் பல எழுத்தறிவுள்ள பெண்களுமே குடும்பப் பெண்களாக மாத்திரமேவுள்ளனர்.



பர்தா அணியும்முறை இன்னும் பங்களாதேஷில் நடைமுறையிலுள்ளது. நான் அதை அகற்ற விரும்புகிறேன்.

பெண்கள் என்ன அணியவேண்டுமென்ற சாதாரண விடயங்களிற்காக நான் போராடவில்லை. அவர்கள் சேலையையோ சல்வார் கமிசயோ எதை அணிந்தாலும் எனக்கு அக்கறையில்லை. ஏனெனில் இதற்கும் அப்பாலுள்ள சில முக்கியமான சுதந்திரங்களிற்காகப் போராட வேண்டியுள்ளது. எனக்காக மாத்திரமல்ல, அனைத்து பங்களாதேசத்துப் பெண்களிற்காகவும் நான் இச்சுதந்திரங்களிற்காகப் போராடுவேன். எனது எழுத்துக்களில் ஒலிக்கும் பெண்களின் குரலாக நானுள்ளேன்.

எனது எழுத்துக்களைப் பெண்கள் வாசிக்கையில், அவை அவர்களை வெகுவாக சிந்திக்க வைக்கின்றன. என்பதை நான் அறிவேன். நான் எழுதுவதெல்லாம் உண்மையென அவர்கள் என்னிடத்தில் கூறுகிறார்கள். சிலர், அவர்களது கதைகளை நான் எழுதுவதாகக் கூறுகிறார்கள். எனது எழுத்துக்கள் பெண்களின் மனங்களை மாற்றுவதாலேயே முல்லாக்கள் என்னைக் கண்டு அஞ்சுகின்றார்கள்.

எனது தேசத்தில் மதவடிப்படைவாதம் செல்வாக்கைப் பெற்று வருகின்றது. இதற்குப் பொறுப்பாளிகள் அரசியல் வாதிகளே. மத அடிப்படைவாதிகள் தேர்தலில் நிற்கும் ஒரு சந்தர்ப்பத்தை அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். 1972-1975 வரையிலான காலகட்டம் வரை அவர்களுக்கு தேர்தலில் நிற்கும் உரிமை வழங்கப்படவில்லை. ஆனால் 1985க்குப் பின் அவர்கள் அரசியலில் பங்குகொள்ளும் வாய்ப்பை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. ... நான் வங்காளத்தை நேசிக்கிறேன். இரு வங்காளங்களும் இணைவதைக் காண்பதே எனது கனவு.

(இந்தியாவிலிருந்து வெளிவரும் "The Voice of People awakening" என்ற ஆங்கிலப் பத்திரிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது).

## நொறுங்களின் விசாலம்



நிலாவுடன்
ஒரு
சேவலும் நாயும்
சல்லாபிற்கும்
மனுஷக் கனவுகளுக்காய்
ஆகாயம்
ஆடைகளைக் கழற்றி வீசும்
நதிகள்
காய்ந்து போவதற்காய்
கண் கலங்கும்
ஒரு ஓரத்தில்
எனது நிழலிலும்
ஆணி அடிக்கப்படுகிறது
நான்
காற்றில் கூட
அசையக் கூடாதென்று.
தென்னையும் பனையும்
எனது
கல்லறைகளின்
ஞாபகம் முளைத்த
தேசத்தின்
மறு நாள் ஒன்றில்
நான்
பல் துலக்கும்
வேப்பங் குச்சுயும்
அபகரிக்கப்படலாம்
அத்தோடு
இறக்கைகள் உதிர்ந்த
பறவைகள் பறக்கும்
மௌன யுகத்தில்
வானத்தை சுமக்க
எனது குழந்தைகளின்
தோள்களும் - இங்கு
தேடப்படும் முன்
மீண்டும்
நிலாவுடன்
ஒரு சேவலும் நாயும்
சல்லாபிற்கும் !

எம். எம். முஹம்மது நகீபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத்தீவும் இலக்கில்லாத் தீர்வுகளும்

எம். எம். எம். நூறுல் ஹக்

சிங்களம், தமிழ், முஸ்லிம்களை பிரதான சமூகங்களாகக் கொண்ட நாடு இலங்கை. இன்றிந்த மூவினங்களுக்குள் நிலவுகின்ற முரண்பாடுகளை மூன்று வகையாக நாம் இனங் காணலாம்.

1. சிங்கள - தமிழ் மக்களுக்கிடையிலான இன வாதப் போக்கு அல்லது பகை உணர்வு.
2. சிங்கள - முஸ்லிம் மக்களுக்கிடையிலான இனவாதப் போக்கு அல்லது பகை உணர்வு.
3. தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான இன வாதப் போக்கு அல்லது பகை உணர்வு.

இத்தகைய நிலை நெடுங்காலமாக இருந்து வருகின்றது. இந்தப் போக்குகளை இலங்கையின் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம்; பிற்பட்ட காலம் என வகைப்படுத்திப் பார்க்கலாம்.

காலத்துக்கு காலம் இம்மூவின மக்களிலிருந்து தோன்றிய தலைமைத்துவங்கள் முஸ்லிம்களிவ் தனித்துவமான அரசியல் தலைமைத்துவம் என்பது 1986களுக்கு முன்னர் இருக்கவில்லை. மாறாக இந்நாட்டை ஆளுகின்ற வர்க்கம் காட்டுகின்ற தலைமைத்துவமே இருந்து வந்தது. இதன் விபரம் பின்னர் இடம்பெறும். நாட்டில் நிலவிய பிரச்சினைகளை எதிர் கொண்ட விதம் சரியா? பிழையா? என்றொரு விவாதத்தையும் நமக்கு மத்தியில் விட்டுள்ளது.

பல்லாண்டு காலமாக பிரச்சினைகள் தீர்க்கப்படாது மேலும் பிரச்சினைகள் வேரூன்றி வந்திருப்பதைக் காணும் போது அந்த தலைமைத்துவங்கள் மீது சந்தேகம் எழுவதென்பது இயல்பான ஒன்றெனக் கொள்ளலாம்.

எது எப்படி இருந்த போதிலும் பிரச்சினைகள் தீர்க்கப்படாது வளர்ந்தோங்கியதற்கு பின்வரும் காரணங்களும் ஒருவகையில் உறுதுணையாக அமைந்திருக்கலாம் என நாம் நம்புவது மிகையானதல்ல.

பிரச்சினைகள் தோன்றிய எழுவாய் ஒரு பக்கமிருக்க, வேறொரு பக்கமாய் அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண முற்பட்டமை.

பிரச்சினைகளுக்கு தீர்வு இதுதான் என இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், எழுதப்பட்ட ஒப்பந்தங்களும் அதனையொட்டி பிரகடனப்படுத்தப்பட்ட சட்டங்களும் நடைமுறைக்கு கொண்டு வராது கிழித்தும் - ஒதுக்கியும் வந்தமை.

தத்துணிவின் பேரில் அதாவது முத்தரப்பு சம்பந்தப்பட்ட விடயங்களில் இருதரப்புக்களுக்குள் உருவான ஒப்பந்தங்கள்.

இத்தகைய சூழல்கள் தீர்வுகளை பின்தள்ளி வந்திருப்பதை வரலாறு நன்கு புடம் போட்டுக் காட்டத் தவற வில்லை எனலாம். வரலாறுகளிலிருந்து பாடம் படிக்கவில்லையானால் அந்த வரலாற்றுத் தடயம் அர்த்தமற்றதாகி விடக் கூடும்.

இலங்கையின் பிரதான சமூகங்களுக்குள் காணப்படும் பிளவு - வேறுபாடுகள் இன வாதமா? அல்லது ஆளும் வர்க்கத்திற்கெதிரான சதியா? என்று கூட தலைமைத்துவங்கள் முரண்பட்டுள்ளன.

ஆகவே, பிரச்சினைகளின் தன்மை என்ன? என்பதைக் கூட நன்குணராத சூழலில் வகுக்கப்படும் தீர்வுகள் எப்படித் தீர்வாக மாறி சமாதானம் - அமைதியைக் கொண்டுவர முடியும்?

''தமிழ் மக்களை ஆயுதம் ஏந்தும் நிலைக்கு கொண்டு வந்தது இந்நாட்டை ஆண்ட வர்க்கங்கள் தான். ஆகையால் நாங்கள் இந்நிலைக்கு வந்தது நிர்ப்பநதமே தவிர விரும்பியல்ல. எங்கள் தரப்பு சுத்தமானதும், நியாயமானதும் கூட.''

இந்தக் கருத்தை ஆயுதம் தரித்த அனைத்துத் தமிழ் குழுக்களும் அவரவர் பரிபாஷையில் - சொற்றொடரில் அழுத்தம் கொடுத்து விளக்கியுள்ளன. (இந்த நிர்ப்பந்தத்தை முஸ்லிம் மக்கள் மீது திணிப்பது தமிழர் தரப்பில் நியாயமா? என்பதைப் பின்னர் பார்ப்போம்)



இன்று மிதவாதிகள் என்று வர்ணிக்கப்படும் தமிழ் தலைமைத்துவங்கள் அன்றுமின்றும் தங்கள் சமூகத்தின் புறக்கணிப்பைத் தெளிவாக விளக்கித் தீர்வுகளை அஹிம்சை வழியில் தேடி நாடி நிற்கின்றனர்.

அப்போதைய ஆட்சியாளர் - பிரச்சினைகள் தோற்றம் பெற்ற போது ஆளும் வர்க்கமாக இருந்தவர்கள்- எதிர்த்த போதும், நிலைமைகளின் அகோரம் விளங்கித் தீர்வுகள் காண்போம் என இறங்கி வந்தனர். இதன் வெளிப்பாடாகச் சில ஒப்பந்தங்களும் உருப்பெற்றன.

இந்த நிலையினை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மக்களை ''இனவாதச் சகதியில்'' அமிழ்த்தித் தாங்கள் ஆட்சி வாகனம் ஏறத்துடித்தனர். அவர்களது எண்ணமும் நிறைவேறியது. தூயநோக்கும் உண்மையும் அங்கு புதையுண்டு கிடந்தது.

இப்படி மாறி மாறித் தோன்றிய இடர்களினால் தமிழ்இளைஞர் சமூகம் வெகுண்டெழுந்தது. அஹிம்சை தலைமைத்துவங்களை நம்பிப் பயன் இல்லை. ஆயுதப் போராட்டத்தின் மூலமே விடிவு காணலாம் எனப் புறப்பட்ட குழுவை வளர்த்துவிட்ட பங்கு தமிழ் மிதவாதக் தலைமைத்துவங்களுக்கும் உண்டென்பது தெளிவானது.

சரியோ, பிழையோ ஆயுதப் போராட்டம் உச்ச நிலையினை அடைந்தபோது, ஆட்சியாளர்கள் தீவிரவாதிகள் என வர்ணித்துக் கொண்டே பேச்சவார்த்தைக்கு ஆயுதப் குழுக்களை அழைத்தனர். விரும்பியோ, விரும்பாமலோ அவர்(களுடன் - தமிழ் ஆயுதமேந்திய இளைஞர்) களுடன் பேசுவதன் மூலமே தீர்வு காணலாம் எனும் பேருண்மையை ஜீரணித்துக் கொண்டனர் அன்றைய ஆட்சியாளர்கள்.

நம்நாட்டிலும் அயல் நாட்டிலும் மிடுக்கிவிடப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகள், சிங்கள - பௌத்தமதத் தலைவர்களின் வெகுண்டெழுந்து பிரயோகித்த தகாத வார்த்தைகளுக்குள் பேச்சுவார்த்தை பிசுபிசுத்துக் கொண்டது.

இதிலிருந்து இன்னும் சில உண்மைகளை நாம் அறியலாம். ஆட்சி வாகனத்தில் தொடர்ச்சியான நிலை கொள்ளுதலுக்கும், எதிர் கட்சிகள் ஆட்சி வாகனத்தில் ஏறிக் கொள்வதற்காகவும் தமிழர் பிரச்சினைகளை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு வந்திருப்பதையும், ஆளும் வர்க்கத்துள் புதையுண்டிருந்த சில இனத்துவவேச சிந்தனையாளர்களின் வெளிப்பாடுகளையும் தரிசிக்கின்றோம்.

இந்த நாடு சிங்கள மக்களுக்குச் சொந்தமானதும், இங்கு பௌத்தம் மட்டுமே உயர்ந்த சமயம் எனக் கூறிக் கொண்டு அதன் விழுமியங்களின் பாதுகாப்புக்கு மாத்திரமே நாம் என்ற கொள்கையிலிருந்து சிங்கள மக்கள் - குறிப்பாக ஆளும் வர்க்கம் விடுபடுவதன் மூலமே சிங்கள - தமிழ் உறவில் நல்லிணக்கத்தைக் கொண்டு வரமுடியும்.

அண்மையில் தொடங்கப்பட்ட அரசு - புலிகள் பேச்சுவார்த்தைகள் கூட சரியான மையத்திலிருந்து துவங்கப்பட்டுள்ளதா? என்பதும் கேள்விக்குரியதே. ஏனெனில் மிக அண்மையில் புலிகள் தரப்பிலிருந்து யுத்த நிறுத்தம் மீறப்பட்டிருப்பதுடன் உடன்பாட்டிலிருந்தும் புலிகள் விலகிக் கொள்வதாகவும் அறிவித்திருந்தது தெரிந்ததே.

எது எப்படி இருந்தபோதிலும், புலிகளிடம் இதுதான் எங்கள் கோரிக்கை எனச் சொல்லுவதற்குத் திட்டமிருக்கிறது. அது நடைமுறைச் சாத்தியமா? என்ற கேள்விக்குப் புறம்பாக புலிகளின் கோரிகைகளுக்கு மாற்றீடான திட்டங்களையும் பரிசீலிக்கப் புலிகள் தயாராகவிருப்பதாகவும் அறிவித்திருந்தனர்.

அதேநேரம் அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு என்பது பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து முன்னெடுத்துச் செல்லப்படும் என அரசு தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் வடக்கு-கிழக்கு பிரிந்த நிலையில் வரும் அதிகாரங்களைக் கொண்டது. புலிகளின் அடிப்படை கோரிக்கைகளில் ஒன்றும், இதுவரை திருத்தம் காணததுமான வடக்கு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு இணைந்த சமஷ்டி ஆட்சி என்பதற்கு எதிரானதுமாகும்.

எதிரும், புதிருமான அடிப்படையிலும் சமாதானம் தேடி பேச்சுவார்த்தையில் அரசும் -புலிகளும் இறங்கினர். உண்மையில் இந்தப் பேச்சுவார்த்தை சமாதானம் நாடியதா? அல்லது இருதரப்பிலும் இராணுவரீதியானப் பலப்படுத்தலுக்கான பூச்சாண்டியா? என்று அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியது எவ்வளவு பொருத்தம் என்பதை இப்போது நாமுணரலாம்.

அண்மையில் நடைமுறையிலிருந்த யுத்தத்தவிர்ப்பு ஒப்பந்தம் மீறப்பட்டதேன்? வெவ்வேறு கோணங்கரிலிருந்து பிரச்சினைகளை அணுகியதன் பரிசு அது. ஒன்றுபட்ட கருத்துக்களில் அல்லது விட்டுக் கொடுத்தல் எனும் நிலையிலிருந்து பேச்சுவார்த்தை தொடரப்பட்டிருந்தால் தோல்வியைத் தழுவியிருக்காது. இது ஒரு யதார்த்தப் போக்கின் வெளிப்பாடு.

இலங்கை அரசு தமிழ் மக்களின் குறிப்பாக வடபகுதி மக்களின் மனங்களை வென்று தன் பக்கம் ஈர்த்துக் கொள்ளவும், சர்வதேசத்தின் நல்லெண்ணங்களையும் தன்பக்கம் திருப்பவும், தனது இராணுவங்களைப் பலப்படுத்திக் கொள்ளத் தேவையான அவகாசங்களை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் தங்கள் பேச்சவார்த்தைகளை மேற்கொண்டது எனலாம்.

புலிகள் தரப்பில் குறிப்பாக குடாநாட்டு மக்களிடம் சிங்களத் தலைமைத்துவங்கள் எல்லாம் ''ஒரேகுட்டையில் ஊறிய மட்டைகள்'' அவர்களை நம்ப முடியாது எனும் நிலையினைத் தெளிவூட்டவும் , தங்கள் இராணுவ பலத்தைக் கூட்டிக் கொள்ளவும், சர்வதேச கவனத்தை தங்கள் பக்கம் கொண்டு வரவும் இந்தப் பேச்சவார்த்தையில் (புலிகள்) முகங்கொண்டது எனலாம்.

புலிகளின் அண்மைய எதிர்பாராத வேளையில் ஒப்பந்த விலகலும், தாக்குதலும் மேற்கொண்டது வெற்றிகரமாக நிறைவேறியது. இது அரசுக்கு ஓர் அச்சுறுத்தலை ஏற்படுத்த வேண்டும் என்பதே புலிகளின் நோக்கம் எனக் கூறப்பட்டுள்ளது.

புலிகளின் பலத்திற்கு இதுவோர் எடுத்துக் காட்டாக இல்லையானாலும், அச்சுறுத்தல் கொடுக்கும் சக்திகள் இன்னும் எங்களிடம் இருக்கிறது என்பதை காட்டப் போதுமானதே . ஆயினும் புலிகளின் இந்தச் செயல் அநாகரீகமானதே.

நமது நாடு கண்ட இருண்ட யுகத்திலிருந்து விடுபட்டு, வெளிச்சத்(தில் -சமாதான) த்தில் முகம் புதைத்துக் கொள்ளவே சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் விருப்பத்தோடுள்ளனர். சமாதானம் தோன்றி சூபீட்சம் பெறவேண்டும் என்ற எண்ணமே இந்நாட்டு மக்களின் மனங்களில் நிலைகொண்டிருப்பது கண்கூடு.

சமாதானம் தோன்றுவதற்கு என்ன விலையினைச் செலுத்தவும் மக்கள் தயாரான நிலையில் இருக்கின்றனர் என்பதை அவர்களின் ஒவ்வொரு செயல்களும் நமக்குத் தொட்டுக் காட்டத் தவறவில்லை.

பிரச்சினைகளின் மையம் என்ன? அதற்கு வேற்றுமையில் ஒற்றுமை காண்பது எவ்வாறு? என்பன போன்ற அம்சங்களைக் கொண்ட அணுகுமுறையில் அண்மைய பேச்சுவார்த்தை தொடங்கப்படவில்லை. ஆதலால்தான் இத்தனை விரைவாகத் தோல்வியைச் சந்திக் கொண்டது.

பேச்சுவார்த்தை என்பது வெறும் பேச்சாக அல்லாது. பிரச்சினைகளின் மையத்தை இனங்கண்டு, அதிலிருந்து பேச்சுவார்த்தைகள் நடைமுறைச் சாத்தியமான திசையில் நகர்த்துவதன் மூலமே சிங்கள - தமிழ் மக்களுக்கிடையில் இணைந்த உறவை கட்டியெழுப்பலாம் எனும் உண்மைகளை மறக்காதவரை வெற்றி நிச்சயமானது.

இலங்கை முஸ்லிம்களைப் பொருத்தவரை, இந்த நாட்டைத் துண்டாட வேண்டும் என்றோ, ஆள வேண்டும் என்ற எண்ணமோ இல்லை. சிங்கள மன்னர்கள் காலம் தொட்டு, இந்நாட்டின் ஆட்சி பீடங்களை அலங்கரித்தவர்கள் வரை தோள் கொடுத்து வந்தவர்கள் முஸ்லிம்கள் என்பது வெள்ளிடை மலையானது.

இந்தநாட்டின் நாலாபுறங்களிலும் சிதறுண்டு முஸ்லிம்கள் வாழ்கின்றனர். ஆதலால் பலவிடங்களில் மிகக் குறைந்த தொகையுடையவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை முஸ்லீம்களில் மூன்றில் இரு பகுதிகள் வடக்கு - கிழக்குக்கு அப்பாலும், மூன்றில் ஒரு பகுதிகள் வடக்கு கிழக்கிலும் நிலை கொண்டுள்ளனர்.

இலங்கையின் ஆதிக்குடிகளில் முஸ்லிம்களும் அங்கம் கொள்கின்றனர். இலங்கையின் வரலாறு தொடங்கும் போது முஸ்லிம்களையும் உள்ளடக்கிய தொடங்குகிறது. முஸ்லிம்களின் பற்று எனும்போது, அவர்கள் சார்ந்துள்ள இஸ்லாம் எனும் வாழ்க்கை நெறியில் அளவு கடந்த பக்தியும் பற்றும் கொண்டுள்ளனர். இஸ்லாத்திற்கெதிரான கோஷங்களும் - கோட்பாடுகளை எதிர்கொள்வதில் பின்நின்றதாகச் சரித்திரமில்லை எனலாம்.

இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். பிரச்சினைகளின் தன்மைகள் வாழ்விடத்தைப் பொறுத்து மாறுபட்டு காணப்படுகின்றன. வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் ஒருவகையானது.

அதேநேரம் வடக்கு -கிழக்கிற்கு அப்பால் வாழ்கின்ற முஸ்லிம்கள் முகம் கொள்ளும் பிரச்சினைகளின் மையம் ஒருவகையானது. இருப்பினும் பொதுவாக எல்லா முஸ்லீம்களும் எதிர் கொள்ளும் பிரச்சினைகளும் உள்ளன. இவைகளை நாம் வரலாறுகளிலிருந்தும், நடைமுறைகளிலிருந்தும் விளங்கக் கூடியதாகவுள்ளது.

இலங்கை முஸ்லீம்களில் பலர் வியாபார அடிப்படையில் நிலை கொண்டுள்ளனர். குறிப்பாக நகரங்களில் சில கடைகளின் சொந்தக்காரர்கள் முஸ்லிம்கள் பெரும்பான்மையான முஸ்லிம்கள் கூலித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். விரல் விட்டெண்ணக் கூடியவர்கள் அரச உத்தியோகங்களிலும், தனியார் கம்பனிகளிலும் கடமையாற்றுகின்றனர்.

இலங்கையின் சில நகரங்களில் முஸ்லீம் வியாபார ஸ்தாபனம் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. இதனைக் கண்டு காழ்ப்புணர்வுற்றவர்களின் எரிச்சல் உணர்வின் உந்துதலின் பேரில் பெரும்பான்மையினர்கள் முஸ்லிம்கள் மீதும் , அவர்களது உடமைகளின் மீதும் குறிவைத்து தாக்கியுள்ளனர்.

இத்தகைய காட்டுத்தர்பார் நடவடிக்கையில் சிங்கள- தமிழ் மக்கள் இறங்கியிருப்பதை நாம் தெளிவாகப் பார்க்கலாம். குறுகிய பார்வையினால் எழுகின்ற இனத்துவேச வேட்காட்டுக்குள் முஸ்லீம்கள் வேட்டையாடப்பட்டு வந்திருப்பதையும் நாம் அவதானிக்கலாம்.

இலங்கையில் ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் கலவரங்களும், தமிழ் - முஸ்லிம் கலவரங்களிலும் ஏறத்தாழ இந்த காழ்ப்புணர்வுத் தன்மையினை அவதானிக்கும் அதேவேளை தமிழ் - முஸ்லிம் கலவரங்களின் பின்னால் அரசியல் காரணங்கள் புதையுண்டு கிடப்பதை நாம் பார்க்கலாம்.

சிங்கள - முஸ்லிம் கலவரங்களினால் இதுவரை முஸ்லிம்கள் அடைந்த சேதங்களையும், தமிழ் - முஸ்லிம் கலவரங்களினால் அடைந்த முஸ்லிம்களின் சேதங்களையும் ஒப்பீட்டளவில் பார்த்தால் தமிழ் முஸ்லிம் இன மோதலினாலேயே அநேக முஸ்லிம்களின் உயிர்களும், உடைமைகளும் இழக்கப்பட்டிருக்கின்றென்பது மறைவானதல்ல. 1915, 1974, ஆகிய காலகட்டத்தில் ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் கலவரங்களும், இடையிடையே நிகழ்ந்த தென்பகுதி கடை எரிப்புக்களும் அடிக்கடி சுட்டிக் காட்டப்படும் இன மோதலாகும். இதுதவிர பாரிய இனக் கலவரங்கள் ஏற்படவில்லை எனலாம்.

வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் முஸ்லிம் சமூகத்தை இழினு படுத்தும் கதாபாத்திரங்கள் மூலம், தவறுகளில் ஈடுபடுவோர்களை இனத்தின் - சமூகத்தின் பெயரால் இனங்காட்டி செய்திகள் வெளியீடுதல் போன்ற அடிப்படைகளிலும் சிங்கள - முஸ்லிம் முரண்பாடுகள் கவனம் பெறுகின்றது.

முஸ்லிம்களின் தலைமைத்துவம் என்பது இலங்கையின் பிரதான கட்சிகள் -பெரும்பான்மையோர் காட்டும் அல்லது ஆளும் வர்க்கம் தரும் தலைமைத்துவத்தையே முஸ்லீம்கள் ஏற்க வேண்டும் என்ற குறுகிய மனோநிலையையும், சிந்தனைகளையும் பெரும்பான்மையினர்களிடம் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

இப்படி இருப்பதன் மூலம் வாக்குச் சேகரிக்கும் முகவர்களாகவும், வெற்றிக்குத் துணையாக முஸ்லிம்களைப் பயன்படுத்திவிட்டு,

சில அற்ப சலுகைகளை வழங்கி, தங்களுடன் தங்க வைத்துக் கொள்ளும் கைங்கரியம் மூலம் முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல் பலத்தை நசுக்கலாம் என்பதில் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருப்பதைப் பார்க்கலாம்.

சிங்கள-முஸ்லிம் இனக்கலவரங்கள் நடந்தது பாரிய அளவில் சேதங்கள் ஏற்படுத்தவில்லை என்பது உண்மையே. ஆனால் எதிர்காலத்தில் இப்படியொரு இனமோதல் தோன்றினால் பாரிய அளவில் சேதங்களை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தலாம்.

ஏனெனில், இதற்கு ஏதுவாகவே முஸ்லிம்களின் வதிவிடங்கள் இயற்கையாக அமைந்து விட்டது. சிங்கள மக்களால் சூழப்பட்ட முஸ்லிம் குடியிருப்புகள் அநேகமுள்ளன. ஆதலால் இன மோதல் என்று வந்தால் பாரிய பாதிப்புக்களை தரவல்லது என்பது நிதர்சனமே.

வடக்கு -கிழக்குக்கு அப்பால் வாழ்கின்ற முஸ்லிம்களில் ஓரளவு கணிசமாக ஒன்றுபட்டு வாழ்வது கொழும்பு, கண்டி, புத்தளம், காலி, வெலிகாமம் போன்ற பிரதேசங்களைக் கூறலாம். இவர்கள் விரல் விட்டெண்ணக் கூடிய குடும்பங்களே. அநேக குடும்பங்கள் சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்டு சூழப்பட்ட பிரதேசங்களே.

இந்நிலையில் நாடு தழுவிய சிங்கள- முஸ்லிம் இன மோதல்கள் வந்தால், அரசபடைகள் தங்கள் கரங்களை விரித்தோ அல்லது இறுக மூடியோ இருந்தால் முஸ்லிம்கள் (வடக்கு - கிழக்குக்கு அப்பால் வாழ்வோர்) இருந்த இடம் தெரியாமல் போய் விடும் 'அபாயம்' இருக்கின்றன.

இவற்றையெல்லாம் கருத்திற் கொள்ளலாது வெறும் பந்துக்கள், மிருகங்கள் வீடுகளுக்குள் அல்லது வளவிற்குள் நுழைவதன் மூலம், நுழைந்த பொருளின் சொந்தக்காரர்களுடன் கத்திக்குத்து, அடிதடி என முஸ்லிம் சிலர் இறங்குகின்றனர். இது விவேகமான நடைமுறையல்ல.

இனவாத நோக்கில் அல்லது சமயத்துடன் ஒட்டிய முஸ்லிம்களின் விடயங்களில் கேவலமாகப் பேசி இழிவுபடுத்தும் கைங்கரியங்களில் பெரும்பான்மையினர் இறங்கினால், அதனை நியாயமான - அமைதியான வழியில் தீர்த்துக் கொள்வது எப்படி என்று அணுக வேண்டுமே தவிர, அடிதடிகள் மூலம் தீர்வு காண முற்படுதல் கூடாது. இல்லையேல் இன்னும் வேறு சில சிக்கல்களைத் தரலாம்.

சில இடங்களில் கட்டியாக -குவிந்திணைந்து வாழ்கின்றோம் என்ற செருக்குமிகு உணர்வு அடிதடியில் இறங்கத் தூண்டுமானால் அதன் முடிவு பாரிய இழப்புகளுக்கு வழியாகவே அமையும்.

சிதறுண்டு - பிளவுபட்டு வாழாது ஒன்றுபட்டு இணைந்து வாழ வேண்டும். அதுவே பலமான வாழ்விற்கு வழியென இஸ்லாம் விளம்பரப்படுத்துவதையும், மோதலில் குதிப்பதற்கு முன்னர் (முஸ்லிம்கள்) சிந்திக்க வேண்டும். பலத்தை கவனத்திற்கொள்ளாது அடிதடியில் இறங்குவதன் மூலம் வெற்றியோ, உயர்ச்சியோ அடைய முடியாது என்பது தெளிவு.

ஒன்றுபட்டுத்தான் வாழ இஸ்லாம் வலியுறுத்துகிறது. ஆகையால் சிதறுண்டு அங்குமிங்கும் வாழும் மக்களைப் பற்றி நாங்(கள் கட்டியாக வாழ்பவர்)கள் கவனத்திற் கொள்ள வேண்டியதல்ல, இப்படியே நாம் நடப்போம் என்று முட்டாள்தனமாகக் கூறுவோரும் உண்டு.

சிந்தனைக்கு இடம் கொடுக்காது வெறுமனே ஆயுதபலத்துடன் மோதலில் இறங்கலாம் என்பது இஸ்லாமியர்களின் நடைமுறையாக இருக்கமுடியாது. மாறாக அது அழிவுகளைத் தேடித் தரும் மனோவிச்சையாகவே அமைய முடியும்.

பயந்துவாழ வேண்டும் - கோழைகளாக மாற வேண்டும் முஸ்லிம்கள் என்று மேற்படிய கருத்துக்களுக்கு அர்த்தம் கொண்டால் அது அறிவுபூர்வமானதல்ல. நிலைமைகளை அனுசரித்து விட்டுக் கொடுத்தல், புரிந்து .

ணர்வுத் தன்மையில் வாழப்பழக வேண்டும் என்பதை வலியுறுத்துவதே மேற்படிய கருத்துக்களின் உண்மை அர்த்தமாகும்.

சிங்கள-முஸ்லிம் மக்களின் முரண்பாடுகளை உரிய முறையில் விளங்கி, அதனை நேரிய வழியில் தீர்த்துக் கொள்ள - தூய எண்ணத்துடன் இருதரப்பு



தலைமைத்துவங்களும் தயாராக வேண்டும். இதன் மூலமே சுமூகமான வாழ்வு இவ்விரு சமூகங்களுக்குள் தோன்ற முடியும்.

இவைகளை கருத்திற் கொண்டு, மனோ விசாலத்துடன் நேர்மை கொண்டு மக்களை நெறிப்படுத்துவதன் மூலமே மகிழ்வான - மனோ நிம்மதியான வாழ்வு அடைய முடியும் எனும் பேருண்மைகளை மறக்கலாகாது. அதுவே உயர்ச்சிக்கு வழியாகும்.

தமிழ் - முஸ்லிம் மக்களின் இடைவெளி அல்லது விரிசல் என்பது வடக்கு -கிழக்கிற்கு அப்பாலில்லை எனக் கூறலாம். எவ்வாறு வடக்கு - கிழக்கிற்கு அப்பால் வாழ்கின்ற மக்களை பூரணமாகச் சிங்கள பேரினவாதம் பற்றிக் கொள்கின்றதோ அப்படியே தமிழ் பேரினவாதம் முஸ்லிம்களை வடக்கு - கிழக்கிற்குள் பூரணமாக அப்பிக் கொண்டுள்ளது.

தமிழ் - முஸ்லிம் மக்களின் இனத்துவேச முரண்பாடு என்பது பொருளாதாரம், அரசியல் எனும் காரணிகளானாலும் உருவான ஒன்று. இது இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்பும், பின்பும் என்று இன்றுவரை காணப்படுவது மிகவும் வேதனையான சங்கதி.

முரண்பாடுகளுக்கு மத்தியிலும் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பரஸ்பர உறவும் - நல்லெண்ணமும் வளர்ந்து வந்திருப்பதை வரலாறு கூறுகின்றன. இதற்கு மாறாக ஏறத்தாழ பதினொரு வருடங்களாக வரலாறு மாறிக் கொண்டிருப்பதையும் நாம் காண்கின்றோம்.

இந்த இடைவெளியின் தாக்கமின்று உணரப்படாமலிருந்தாலும் நாளையே சந்ததிகளின் மத்தியில் விஸ்வரூபமெடுத்துத் தாண்டவமாடத் தொடங்கினால் பிரதேசமே அழிவில் தஞ்சம் பெற வேண்டியதாகி விடும் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

உண்மையில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் பிணக்குகள் வரக்காரணம் என்ன? முஸ்லிம்களையும் உள்ளடக்கித் தமிழர்கள் ஆளவேண்டும். அதாவது தலைமைத்துவம் தமிழர்களிடமிருக்க வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழருக்கு மட்டுமே சொந்தமான பாரம்பரியப் பிரதேசம், ஒப்பீட்டளவில் தமிழர்களை விட முஸ்லிம்கள் அதிக கடைகளுக்குச் சொந்தக்காரர்கள் எனும் காழ்ப்புணர்ச்சி. முஸ்லிம்கள் என்று ஒருதனியான இனமல்ல அவர்களும் தமிழர்களே'' எனும் கூற்றுக்களினால் முரண்பாடுகள் தோன்றுகிறதெனலாம்.

தமிழ் சமூகத்திலிருந்து தோன்றிய மிதவாத அரசியல் தலைமைத்துவங்கள்தொட்டு, ஈற்றில் வெளிக்கிளம்பிய ஆயுத மேந்திய அத்தனை அமைப்புக்களும் முஸ்லிம்களை இம்சைப்படுத்தி வந்திருக்கின்றது. முஸ்லிம்களிலிருந்து முஸ்லிம்களுக்கான தலைமைத்துவம் தோன்றி விடலாகாது என்பதில் சிங்கள, தமிழ் பேரினாதம் தொடர்ந்திருந்து வந்திருப்பதை தரிசிக்கலாம்.

இதுமாத்திரமன்று, ஆயுதக்குழுக்கள் முஸ்லிம் கல்வி மான்களையும், உத்தியோகப் பூர்வமாக பயிற்சி பெற்ற முஸ்லிம் பொலிஸார்களையும் வேறாக்கி கொன்றொழித்த நிகழ்வுகளும் இந்தப் பின்னணியில் நோக்கத் தக்கது.

எவ்வாறு சேர் பொன் இராமநாதன் போன்றோர்களின் கூற்றுக்கள் நிராகரிக்கப்பட்டு முஸ்லிம்கள் அரசியல் பிரதிநிதித்துவம் பெற்றார்கள். அஃது போன்றே ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தலுக்கும், சிங்களத் தலைமைத்துவத்தின் இடக்கு முடக்கான பிரச்சார சவால்களுக்கு மத்தியிலும் முஸ்லிம் கட்சி தோற்றம் பெற்று வளர்ந்து வந்திருப்பதைப் பார்க்கின்றோம்.

ஆயுதமேந்திய அனைத்து தமிழ் இயக்கங்களின் ஆயுதங்கள் முஸ்லிம் மக்கள் மீது திருப்பப்பட்டிருப்பது வரலாறு. ஆயினும் புலிகள் தவிர்ந்த பல மிதவாதக் குழுக்களும், ஆயுதமேந்திய தமிழ் குழுக்களும் முஸ்லிம்களை தனியான ஓர் இனமாக - சமூகமாக ஏற்று , அர்வகளுக்(கான - முஸ்லிம்களுக்) கான உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதில் ஒன்றுபட்டுக் கூறியுள்ளனர்.

அதேவேளை இது விடயமாகப் புலிகள் மௌனம் சாதிப்பது பல கேள்விகளை எழுப்ப வழியாகும். விரும்பியோ, விரும்பாமலோ விடுதலைப் புலிகள் ஓர் அச்சுறுத்தும் சக்தி என்பது பல கட்டங்களில் எண்பிக்கப்பட்டு வந்திருப்பதை நாம் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களின் குரலாக ஸ்ரீ.ல.மு.காங்கிரஸை அங்கீகரிப்பதாக புலிகள் அண்மையில் அறிவித்திருந்தது அறிந்ததே. அப்படியானால் இது வரை ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் முன்வைத்த கோரிக்கைகளையும், கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்டதாகவே அர்த்தப்படும். ஆகவே, ''முஸ்லிம்கள் தனியான ஒரு சமூகம் அவர்களுக்கென்று வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணத்துள் ஓர் அதிகார அலகு வேண்டும்'' எனும் கோரிக்கையிட்டு புலிகள் மௌனம் கலைக்காதிருப்பது அறிவு பூர்வமானதல்ல எனலாம்.

அரசு - புலிகளுக்கிடையில் சுமார் 14 வாரங்களாக கடைப்பிடிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் அண்மையில் புலிகளினால் மீறப்பட்டது தெரிந்ததே. புலிகளின் ஒப்பந்த விலகலுக்குக் கூறிய காரணங்களில் ''கிழக்கு மாகாணத்தில் புலிகள் ஆயுதத்துடன் நடமாட வேண்டும் என்ற கோரிக்கை பற்றிய அரசின் பின்னடைவும்'' ஒன்று எனக் கூறப்பட்டுள்ளது. இது முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலாகவுள்ளது.

இப்படி முஸ்லிம்கள் அஞ்சுவதற்கு காரணம் இருக்கிறது. அண்மையில் அமுலிலிருந்த யுத்த தவிர்ப்பு ஒப்பந்த வேளையில் வாழைச்சேனை பிரதேசத்தில் பொருள் பறிப்பிலும், சாய்ந்த மருதில் மோட்டார் சைக்கிள் குறைந்த பணத்தை கொடுத்து அவர் (கள்-உரிமையாளர்)களின் விருப்பம் கேட்காது அபகரித்தலிலும், அதே இடத்தில் உள்ள வைத்திய சாலையில் நுழைந்து பிளாஸ்டர்கள் பறித்துச் சென்றமையும் ஏற்கனவே புலிகள் முஸ்லிம்கள் மீது கொண்ட அடவாடித்தனங்களும் இப்படி சந்தேகிக்க வைக்கிறது என்று கூறலாம்.

தமிழ் ஆயுத மேந்திய குழுக்கள் முஸ்லிம்கள் மீது மேற்கொண்ட அடாவடித்தனங்களிலும், ஈனச் செயல்களிலிருந்தும் புலிகள் ஆரம்ப காலத்தில் விலகி நின்றது உண்மையே. ஆயினும் பின்னர் புலிகளும் இந்த நிலைக்கு சோரம் போனதும் மெய்யே.

1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1990, 1991, 1992 ஆகிய காலகட்டத்தில் நடந்த முஸ்லிம்கள் மீதான தாக்குதலில் புலிகளின் பங்கிருந்தது தெளிவான விடயம். குறிப்பாக காத்தான் குடி பள்ளிவாயல் கொலை. ஏறாவூர் தாக்குதல், அழிஞ்சப்பொத்தான போன்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம் அழிப்பு நடவடிக்கைகளின் நினைவுகள் முஸ்லிம்களின் மனதை விட்டு நீங்குமா? என்பது ஒரு கேள்வியே.

இந்த ஈனச் செயல், இந்தியாவின் பிரதமர் ரஜீவ்வை கொன்றது, கைதிகளாக்கிய வடபகுதி முஸ்லிம் 37 பேர்கள் பற்றிய விபரம் கூறாமை முஸ்லிம்களின் அபிலாசைகளைப் பற்றி புதிய கருத்துக்களைக் கூறாமை. அண்மைய யுத்த விலகல் போன்ற புலிகளின் நடவடிக்கைகள் அவர்களின் அரசியல் சாணக்கிய மற்ற அணுகுமுறைமைகளுக்குச் சான்று இவை என்பது அரசியல் அவதானிகளின் கருத்து.

இப்படி புலிகளின் அறிவுக்குப் புறம்பான நடவடிக்கைகளினால் முஸ்லிம்கள் இன்றும் சந்தேகித்து வாழ்கின்றனர். புலிகள்தான் தமிழ் மக்கள் - சமூகமல்ல; தமிழ் மக்கள் வேறு, புலிகள் வேறு எனப் பார்க்கப்படல் வேண்டும் என்ற கோஷம் வலுப்பெறுவதை அவதானிக்கலாம்.

ஆனால் புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு என்று எண்ண முடியவில்லை. ஏனெனில், புலிகளை மீறி தமிழ் மக்களோ, அல்லது ஏனைய ஆயுதக்குழுக்களோ நேர்முகமாக முஸ்லிம்கள் பற்றி புலிகளுடன் பேசுவதற்கு அஞ்சும் நிலைமைகளைக் காணலாம்.

எது எப்படி இருப்பினும் தமிழ் - முஸ்லிம் மக்களின் மத்தியில் காணப்படும் முரண்பாடுகள் களையப்படல் வேண்டும். இவ்விரு இனங்களின் தலைமைத்துவங்கள் புத்தி ஜீவிகள் கொண்ட குழுக்களுக்கிடையில் பரஸ்பரம் உறவாடி - கலந்து யோசித்து தீர்க்கமான முடிவுகளுக்கு இரு சமூகங்களும் கட்டுப்படல் வேண்டும்.

இத்தகைய புரிந்துணர்வுகளுக்கு மத்தியில் காணப்படும் இணக்கங்களே இலங்கத்தக்கது. இதனை மறக்காத வரை மோட்சத்திலும், ஜெயத்திலும் தமிழ் - முஸ்லிம் உறவு தஞ்சமடையுமெனலாம்.




# கணவன்மார்களின் கண்ணியமற்ற கலவியலுக்கு சிறைத்தண்டனை.

சின்னமருது

மனைவியரின் விருப்பமின்றி பலவந்தமாக புணர்ச்சியில் ஈடுபடும் கணவன் மார்களுக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இலங்கைத் தண்டணைச்சட்டக் கோவையின் பாலியல் குற்றங்கள் தொடர்பான ஏற்பாடுகளில் திருதத்ங்கள் கொண்டு வரப்படவுள்ளன. இது தொடர்பான சட்டமூலம் கூடிய விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.



பெண் ஆணுக்கு இன்பமளிப்பதற்கு உள்ள ஒரு போகப் பொருள். ஆண் தனது இச்சையை தீர்த்துக் கொள்ளும் பொழுது அவளது விருப்பு உணர்ச்சி உடல் சுகவீனம் ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. இவ்வாறு சில சமூகக் கருத்துக்கள் உள்ளன. இவை ஆணாதிக்க கருத்துக்களே.

இப்புதிய சட்டமூலம் பெண்களின் உரிமைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் மதிப்பளிப்பதாக உள்ளது.

இச்சட்டத்தை எதிர்ப்பவர்கள் இச்சட்டமூலத்திற்கு மேற்கத்திய கரி பூசுவதோடு தெய்வீக சட்டத்திற்கு எதிரானது எனக் குரல் எழுப்புகிறார்கள்.

ஒரு மனிதப் பிறவியின் உணர்ச்சிக்கு மதிப்பளிக்கும் நியாயத்திற்கு மதம், பிரதேச வேறுபாடு கிடையாது.

ஆணும் பெண்ணும் ஆண்டவனின் பிள்ளைகள் ஆண்டவன் பெண்ணின் விருப்புக்கு மாறாக ஆண் புணர்ச்சியில் ஈடுபடலாம் எனக் கூறப் போவதில்லை.

இப்பொழுது பெண்கள் முஸ்லீம் நாடுகளில் கூட பொலீஸ் படையிலும் இராணுவப் படையிலும் சேர்ந்து சேவையாற்றுகின்றனர். இவ்வாறான பெண்கள் கணவனின் பாலியல் ஆக்கிரமிப்புக்கு அடிமையாவதற்கு தயாராக மாட்டார்கள்.

புணர்ச்சிக்கு எதிரான இச்சட்ட மூலத்திற்கு ஏன் இவ்வளவு பயப்படுதல் வேண்டும். தாங்கள் தங்கள் அன்பான மனைவியருக்கு சம அந்தஸ்து கொடுத்துள்ளோம். அவர்கள் இஷ்டமின்றி புணர்ச்சியில் ஈடுபடுவதில்லை எனவே இச் சட்டம் எம்மை பாதிக்கப் போவதில்லை என மார்தட்டி கூறலாமே.

மேலும் முஸ்லிம் நாடுகளில் சட்டங்கள் மற்ற இன மக்களுக்கு விலக்களித்து இயற்றப்படுவதில்லை. இலங்கையின் பொதுச்சட்டங்கள் ஒரு குழுவுக்கு விலக்களிக்க வேண்டுமென கேட்பது என்ன வகையில் நியாயம்.

பலதார மணம், போன்ற சட்டங்கள் இந்திய நாட்டின் சமூக ஒழுங்கில் சீர்கேட்டினை கொண்டு வந்துள்ளது. எனவே அவர்கள் இது தொடர்பாக திருத்தம் கொண்டு வரவுள்ளதனை நாம் ஆதரிக்க வேண்டும்.

பெண்ணடிமைத்தனத்தையும் ஆணாதிக்கத்தையும் சட்டங்களின் மூலம் நியாயப்படுத்தும் காலம் மாறி வருகிறது என்பதை நவீன கருத்தியல்கள் காட்டி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித இருப்பு ஒரு சமூக நோக்கு


க. கணேசராசா
விரிவுரையாளர் கிழக்குப் பல்கலைக்கழகம்

நிகழ்கால ஆய்வில் மனிதன், மனிதசாரம், மனிதத்துவம் என்பன மனித இருப்பில் முக்கியத்துவம் பெறுகின்றன. மனிதன் எனும் போது ஏனையவற்றில் இருந்து அவனது இருப்பு எவ்வாறு வேறுபட்டு காணப்படுகிறது? மனித இருப்பு நிலையானதா நிலையற்றதா அதனை நிலையற்றதாக மாற்றும் சக்தி என்ன? மனிதன் என்பவன் யார்? அவனது நோக்கம் என்ன? மனிதர்கள் சாவு, நிலையாமை என்பவற்றை வைத்துக் கொண்டு ஒப்பாரி வைக்கிறார்கள் அல்லவா? அல்லது இயற்கை விதியில் இருந்தும் வரையறையில் இருந்தும் ஏதோ ஒருவகையில் கடந்து சென்று விடவேண்டும் என்கிற வேட்கையோ தங்கள் உள்ளத்தில் இருக்கிறதல்லவா ஆனால் அதற்கு இன்றைய அநீதியான விடயங்கள் சவாலாக உள்ளன.

இருப்பு என்பது இருத்தலைக் குறிக்கிறது மனித இருப்பு என்பது மனித இருப்பினை சுட்டிக் காட்டுகிறது. நாம் பிறக்கும் போது இருந்த இருப்புக்கும் இப்போதுள்ள இருப்புக்கும் உள்ள தொடர்பு யாது? மனிதன் எனும் போது மனித சிந்தனை, சுதந்திரம், செயற்பாடு, உணர்வு, கற்பனை கனவு இலட்சியம் ஆற்றல் போன்றவற்றின் தொகுப்பு ஆகும். மனித இருப்பு சுதந்திரமானதா? அப்படியாயின் அந்த சொல்லின் அர்த்தத்தில் இருந்து மனிதன் அந்நியப்படுத்தப்பட்டுள்ளானா மனிதன் சுதந்திரமாக வாழ்வது அவனது உரிமையானால் அதனை எந்தக் காரணி கட்டுப்படுத்துகிறது அது பொருளாதாரமா, சமூகமா சமயமா சட்டமா, மரபுகளா இதில் எது மனித இருப்பினை தடைப்படுத்துவது? சித்தாந்தம் பேசுவதோ அறம் பற்றிப் பேசுவதோ மனிதனை பிரதிபலிக்காது. உண்மையை நடைமுறை ஊடாக நிருபித்துக் காட்ட வேண்டும்.

மனிதனானவன் தனது இருப்பையும் தனக்கு அப்பால் உள்ள பெளதீக இருப்பையும் உணர வேண்டும் மனித இருப்பின் முதற்படி நான் யார்? எனது அகம் எது? நான் அழிபவனா? அழியாதவனா? என அறிய ஆவலுடையவனாக இருக்க வேண்டும். கிரேக்க தத்துவஞானி.

''உன்னையே நீ அறிவாய்'', அறிவு என்பது ஒருவகை நற்பண்பு என்ற வாக்கியமும் ஐரோப்பிய பகுத்தறிவாதி டேக்காட்றிய ''நான் சிந்திக்கின்றேன். ஆகவே நான் உள்ளேன்'' எனக் கூறுவதும் இதனை மறுபுறமாக உணர்த்துகிறது.




மனிதன் ஒரு இனஜீவி அவனின் இருப்பில் அகம் அல்லது உணர்வு மனம் அவசியமான ஒன்று , அவனை அவனது உணர்வில் விருப்பத்தில் இருந்து பிரிக்கக்கூடாது எனலாம். மனித இருப்பில் இருந்து மனிதனை பிரிப்பது சமயம் என்ற கருத்து கூறப்படுகிறது. சமயம் ஏன் தோன்றியது சமயத்தின் நோக்கம் என்ன? சமயம் மனிதனிடம் சாதித்து என்ன? சமயம் உணர்த்தும் மனித இருப்பு யதார்த்தத்தில் சாத்தியமானதா? அல்லது சமயம் வேறு தத்துவ உண்மை வேறானதா? இங்குதான் தர்க்கபுல நெறிவாதிகளும், இருப்பு வாதிகளும் மாக்ஸிய



வாதிகளும் முரண்படுகிறார்கள். ஒருவகையில் ஹெகலிய வாதம் மனித இருப்பினை பரம்பொருளோடு தொடர்பு படுத்துகிறது. அதாவது மனிதன் வாழ்ந்தும் வாழாமல் இருப்பது எந்தளவுக்கு பொருத்தமாக உள்ளது. மனிதராகிய நாம் வாழ்வதற்காக சாவதா இல்லையேல் சாவதற்காக வாழ்வதா இதில் ''பாஸ்க்கால்'' என்ற இருப்புவாதி உலகை நிராகரிக்கச் செய்கிறார். சார்வகார்கள் உலகை ஏற்கிறார்கள். சங்கரர் உலகை திரிபானது என்றார். கிறிஸ்தவம் உலக வாழ்வில் வாழ்கிறோம் என்கிறது . ''நாகார்சுணர்'' என்ற பெளத்த மத சிந்தனையாளர் உலகம் பொய்யானது என விபரித்தார். எது உண்மை! மனிதனா அதன் இருப்பா? அறியா அறிவை அறிவால் அறிவது எப்படி? மதங்கள் கூறும் அறிவானது சமுதாய சார்புடையன என்று பரவலாக உள்ள ஒரு கருத்து. உலகில் எந்த மதங்களாலும் பொருள்முதல்வாதத்திலிருந்து சமுதாய வெளிப்பாடுகளில் இருந்தும் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள முடிந்ததில்லை. மதங்களும் பொருள் முதல் வாதத்திலிருந்து விடுபட முடியவில்லை. இதனாலேயே மாக்ஸிய வாதம் பொருள் முதல் வாத சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்தது என்றார்.

மனித இருப்பினை சமயங்கள் விழுங்குகின்றன அது சுதந்திரத்தின் எதிரி என்ற கருத்தும் கூறப்படுகிறது.

மனித இருப்பில் சமயம் ஒரு முதலாளித்துவ போக்குடையதாக இன்று மாறியுள்ளது. ஐரோப்பிய வரலாற்றில் இதனை அறியலாம். இதனாலேயே 'மாக்ஸியவில்லி' தனது எதிரான கருத்தை முன்வைத்தார். பல இருப்புவாதிகள் மதத்தினை நிராகரித்தனர். நீட்சே கூறும் போது கடவள் இல்லை, கடவுள் இறந்து விட்டார், கடவுளைக் கொன்று விட்டோம் எனக்கூறி மனித இருப்பினை நிலை நாட்டுகின்றார் நீட்சே. 'ஹிக்ககாட்' இதனை தானாக உள்ள பொருள் ஒன்று தனக்காக உள்ள பொருள் ஒன்று என்றார். மனிதன் வேறு சுதந்திரம் வேறு இல்லை. மனித சுதந்திரம் 'விதி' என்பதனூடாக அமிழ்த்தப்படுகிறது. விதி என்ற சொல்லால் மனித இருப்பு பேணப்படுகிறது. விதியினை மனிதன் உண்டாக்கினானா? அல்லது விதியினால் மனிதன் உருவாகினானா? என்பது சந்தேகமாக உள்ளது. இதனை மாறி கடவுளை மனிதன் படைத்தானா அல்லது மனிதன் கடவுளைப் படைத்தானா? என்பது தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ளது. இது இருப்பு (Being) ஆதல(Becoming) என்ற பிரச்சினையாகும். மனிதனுக்கு மூப்பு, பிணி, சாக்காடு என்பன மனித இருப்பில் நிலையாமையை வற்புறுத்துவதாக உள்ளன. என்றார் கெளதம புத்தர். அதனை அழித்து தனது இருப்பினை துறவறத்தின் மூலம் உணர்த்த முயற்சித்தார்.

இந்தவகையில் உலக வரலாற்றில் சல்மான் ருஸ்தி, நஸ்ரீன் போன்றோர் ஏன் துன்பப்படுத்தப்பட்டார்கள் அங்கு உரிமை என்ற மனித இருப்பின் பண்பு எங்கே? 'மாக்ஸிய வல்லி' கூறியது நோக்கம் செயல்முறையை நியாயப்படுத்துகிறது என்பது இங்கு பொருத்தமா? பிளேட்டோவின் உருக் கோட்பாட்டை அறவியல், அறிவாராட்சியியல் ரீதியாக முன்வைத்து மனித இருப்பை வேறு ஒரு நோக்கில் மாற்றுகிறார் . இது கிரேக்கத்தில் சோபிஷவாதிகளுக்கு மாறாகவே உள்ளது. இதில் சோக்கிரட்டீஸ் பிளேட்டோ வெற்றி கண்டாரா? சிலப்பதிகாரத்தில் கோவலனின் இருப்பு மாறியது ஏன்? இலகுவாக கண்ணபனாயனார் ஏன் தனது இருப்பினை உணர்த்தினார். சாதிக்கும் மனித இருப்புக்கும் தொடர்பு உள்ளதா? சாதிகள் மனித வர்க்கத்தை முரண்படவைக்கிறது.ஏன் அது மனித இருப்பை முரண்படுத்துகிறது?

தொகுத்துக் கூறும் போது மனித இருப்பு என்பது பெளதீக இருப்பா அல்லது அதீத இருப்பா என நிருபிப்பது சிரமமாக உள்ளது. அதீத இருப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பது தான் கருத்துவாதம் . இது எந்த அளவு விஞ்ஞானமயமாக பகுப்பாய்வு செய்யக்கூடியது எனும் போது பிரச்சினை தோன்றுகிறது. சுவர்க்கம், நரகம் ஒரு அதீத எடுப்பு என்றால் இதனை நம்பலாமா? இருப்பின் சடத்துவ ரீதியாக நோக்குவது சிறந்தது .

மனித இருப்பு தீமை நன்மை , நீதி , அநீதி போன்ற அடிப்படையிலேயே மனித இருப்பு என்பது நமது புலனுக்கு உட்படாத சக்தி மூலம் தோற்றம் பெற்றது என்பது நவீன விஞ்ஞானத்துக்கு பொருத்தமற்றதே.

மனித இருப்பை ஒழுங்குபடுத்த மதங்கள் தோன்றியதற்கான ஒரு அரண் என்பது சில வேளை உவமையாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News paper in Sri Lanka.

WITH BEST COMPLIMENTS FROM

# Ali Brothers (Pvt) Ltd.

EXPORTERS OF NATURAL RUBBER
IMPORTERS OF RECONDITIONED MOTOR VEHICLES

228, LAYARDS BROADWAY, COLOMBO - 14.
TEL: 541104, 330207
FAX: 94 - 1 - 541104
TELEX: 22722 ALIBRSCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப் பதிவு: டெக்னோ பிரிண்ட், 6, ஜெயவர்த்தன அவெனியூ, தெகிவளை. தொ.பே.737708